
# The Skanda Primary

2010 - 2014




04th Anniversary

**J/SKANDAVARODAYA PRIMARY SCHOOL**

KANDARODAI, CHUNNAKAM.

10.10.2014




















உ

# The Skanda Primary

## கடவுள் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## 4 வது ஆண்டு சிறப்பு மலர்

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை


கந்தரோடை, சுன்னாகம்.

**10.10.2014**

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | - | "ஸ்கந்தா ஆரம்பம்" |
| வெளியீடு | - | யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை |
| பதிப்பு | - | 2014 ஒக்டோபர் 10 ம் திகதி |
| இதழாசிரியர்கள் | - | திருமதி வே. சிவகுமார்,<br>திருமதி வி. பிரதாபன் |
| நூல் வடிவமைப்பு | - | நியூ பாரதி பிறின்ரேர்ஸ் |

| | | |
|---|---|---|
| **Title** | - | "The Skanda Primary" |
| **Puplishers** | - | J/Skandavarodaya Primary School |
| **Puplished on** | - | 10th of October, 2014 |
| **Editors** | - | Mrs. V. Sivakumar,<br>Mrs. V. Pirathapan |
| **Printers** | - | New Barathy printers' |

# OUR FOUNDER



LATE KANDIAH UPATHIYAYAR

# ஸ்கந்தா ஆரம்ப பாடசாலைக் கீதம்

I

"ஸ்கந்தா" ஆரம்ப பாடசாலை அன்னை
இலங்கிட என்றுமே போற்றிடுவோம்,

இங்கித ஆயகலைகள் அனைத்தையும்
உவந்திடும் அன்னையை வணங்கிடுவோம்.

II

சீரிய செந்தமிழ், சைவமோ, டாங்கிலம்,
செப்பிடும் எண்ணும், எழுத்தும் கொண்டு
நேரிய விஞ்ஞான, கணித, முகாமை,
நித்தியம் வென்றிட வந்தனை செய்வோம்.

III

ஸ்கந்தனை போற்றிய கந்தைய வள்ளலின்
சிந்தையில் விளங்கும் ஆலயமே,
முந்தையோர் மகிழ்ந்த முதுசொம் அனைத்தையும்
விந்தையோடதனை போற்றி வணங்குவோம்.

**இயற்றியவர்:**

**இசை ஆசிரியர்: திரு.K.S.சிவஞானராஜா**

The Skanda Primary

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை

## மகுட வாசகம்

"உண்மையே உயர்வு தரும்"

## தூரநோக்கு

"தேசிய விழுமியங்களை நாட்டுக்கு அர்ப்பணிக்க வல்ல அறிவுடைய மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல்."

## நோக்கக்கூற்று

"நவீன உலகின் பரிமாணத்திற்கேற்ப புதியவற்றை படைக்கும் பண்புசால் விருத்தியூடாகக் கல்வித்தரமும் தேர்ச்சியும் அடையும் வண்ணம் மாணவ சமுதாயத்தை உருவாக்கி கல்வியினால் மேன்மையடையச் செய்தல்."



# பண்புகள் நிறைந்து வாழி

சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பண்பாடுகளும் பாரம்பரியங்களும் கட்டிக் காப்பதற்காக எமது முன்னோர்களால் அமைக்கப்பட்டவைதான் இப்பாடசாலைகள். இந்த வகையில் கந்தரோடை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் ஆகின்றன. திருவாளர் நந்தீஸ்வரனைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு 15.06.2010ல் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இந்த நான்கு வருடங்களில் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டது. கல்விப் பாதையில் சிறந்த அர்ப்பணிப்புடன் அதிபர், ஆசிரியர்கள் செயற்பட்டதன் காரணமாகத் தரம் ஐந்து மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைக் கடந்த ஆண்டில் பெற்றுக் கொடுத்தனர். சிறிய மாணவர்களாக இருந்த போதும் பெரிய வகுப்பு மாணவர்களுக்கு நாம் சளைத்தவர்கள் அல்லர் எனும் வகையில் விளையாட்டுக்களிலும் ஏனைய போட்டிகளிலும் சிறந்து விளங்குவதை நாம் காணலாம். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இப்பாடசாலை சிறந்த ஒரு கல்லூரியாக உருவெடுக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இத்தகைய வெற்றிக்குக் காரணமாக இருக்கின்ற இப்பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் இவர்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை. ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்ற வேளையில் சிறந்த ஒரு மலரையும் வெளியிடுவது சிறப்பம்சமாகும். எல்லோரும் நலமுடன் வாழ ஆசிர்வதிக்கின்றேன்.

**பிரம்மஸ்ரீ இ. சோமேஸ்வரசர்மா**
**அருளானந்தப் பிள்ளையார் கோவில்,**
**கந்தரோடை.**
**பிரதமகுரு,**
**கந்தன் கோயில்.**



# ஸ்தாபகர் குடும்பத்தவரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டு தனது ஐந்தாவது அகவையில் பெருமையுடன் காலடி வைக்கின்றது. ஸ்கந்தாவின் பழைய மாணவன் என்ற கோதாவில் நானும் இதில் பெருமையும், பெருமகிழ்வும் அடைகின்றேன்.

ஒட்டுமொத்தமான கல்வி விருத்தியின் அடித்தளம் ஆரம்பக்கல்வியே. தனியே கல்வியறிவை மட்டுமன்றி அன்பு, ஒழுக்கம், பண்பாடு, உள்ளிட்ட மனித விழுமியங்களையும் சமூகம் சார்ந்த அக்கறை, சூழல் விழிப்புணர்வு பற்றிய அறிமுகமும் ஒரு குழந்தைக்கு பெரும்பாலும் ஆரம்பப் பாடசாலையிலேயே கிடைக்கின்றது. தனது பெற்றோர், உறவுகளிடமிருந்து சமூகத்தை, உலகை நோக்கிய பயணத்தின் முதல் அடியே ஆரம்பப் பாடசாலை. ஒரு சிறந்த பிரஜையை உருவாக்குவதில் ஆரம்பப் பாடசாலை பிரதான பங்கு வகிக்கின்றது. ஒரு மனிதனை உருவாக்கும் கலைக்கூடமே ஆரம்பப் பாடசாலை எனலாம்.

இவ் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களே ஆயினும் அதில் முழுமையான அர்ப்பணிப்புடன் தனது பணியினை முழுவீச்சுடன் ஆற்றி வருவது கண்கூடு. கந்தரோடை மட்டுமல்ல அதனைச் சுற்றியுள்ள அயற்கிராமங்களின் குழந்தைகளுக்கும் இப் பாடசாலை ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்த வகையில் இப்பகுதிக்கும், எமது சமூகத்திற்கும் பல்வேறு அறிஞர்களையும், விற்பன்னர்களையும், நற்பிரஜைகளையும் பாடசாலை உருவாக்கித் தரும் என்பதில் ஐயமில்லை.

இப் பாடசாலை மேலும் வளரவும், வானளாவிய புகழ் பெறவும் எனது வாழ்த்துக்கள்.

த.சித்தார்த்தன்,
(மாகாணசபை உறுப்பினர் – வட மாகாணம்)
(ஸ்தாபகர் குடும்பம் சார்பாக)



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை சமூக அபிமானம் பெற்ற ஒரு பாடசாலை. ஆரம்பக் கல்வியின் மிகப்பிரதான தேர்ச்சியான "அனைத்து மாணவர்களையும் இடைநிலைக் கல்விக்குத் தயார்படுத்தல்" என்ற பிரதான இலக்கினை இப் பாடசாலை நிறைவு செய்து வருகின்றது. இப் பாடசாலையின் மாணவர்கள் இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புத் தேடி எப் பாடசாலைக்குச் செல்லினும் அவர்கள் அங்கு விருப்புடன் வரவேற்கப்படுகின்றனர்.

இப் பாடசாலை மீதான பெற்றோர் மற்றும் சமூக அபிமானம் அபரிமிதமானது. பாடசாலையின் அபிவிருத்திசார் கூட்டங்களில் பங்கேற்பது மட்டுமன்றிக் கூட்டத் தீர்மானங்களைச் செயற்படுத்துவதிலும் முன்னின்று உழைக்கின்றனர்.

எமது கல்வி அமைப்பில் ஆரம்பப் பாடசாலைகள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறானது தமது பாடசாலைக்கான சிறந்த குறிகாட்டியாக கருதி வருகின்றனர். அவ்வகையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமன்றி இரு பாடங்களிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அதி உச்ச அளவில் காண முடிகின்றது. இது ஒரு சிறந்த குறிகாட்டியாகும். இப்பாடசாலையின் பெருமையைப் பறைசாற்ற பாடசாலைச் சமூகம் எடுக்கும் விழா பொருத்தமானதே. இப் பாடசாலை தொடர்ந்து தேர்ச்சி மிக்க மாணவர்களை உருவாக்கவேண்டு மென வாழ்த்துகின்றேன்.

**திரு. ஆ. ராஜேந்திரன்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 5ஆவது ஆண்டில் தடம்பதிக்கும் இவ்வேளையில் அதனை முன்னிட்டு வெளியிடப் படும் மலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எமது வலயத்திலே சிறந்து விளங்கும் ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை விளங்குவதுடன் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஊட்டற் பாடசாலையாகவும் காணப்படுகிறது. கல்வித் துறையில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக் கென ஓர் தனியிடத்தினைப் பெற்று வளர்ந்து வருகின்றது.

நாட்டின் எதிர்கால சிற்பிகளான சிறார்களைச் சிறந்த ஒழுக்க சீலர் களாகவும் கல்வியில் சிறந்தவர்களாகவும் உருவாக்குகின்ற மகத்தான சேவையை இன்று போல் என்றும் சிறப்புற வழங்க வாழ்த்துகின்றேன்.

4 ஆம் ஆண்டு நிறைவில் வெளியிடப்படும் இம் மலர் மாணவர் களினதும், ஆசிரியர்களினதும் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் ஊடகமா கவும் அமைவதுடன் பாடசாலையின் வரலாற்றை வெளிக்கொணரும் சான்றாகவும் அமைய வேண்டும்.

இம் மலர் வெளியீட்டின் பொருட்டு அயராது உழைத்த அனைவ ருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் சிறப்புற அமைய ஆசி கூறுகின்றேன்.

**திரு. செல்வரட்ணம் சந்திரராஜா**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்வி வலயம்.**



# சகல துறையிலும் சிறந்ததொரு ஆரம்பப் பாடசாலை

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் முதலாவதாக வெளிவரும் இவ் இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

வலிகாமம் வலயத்தின் பாடசாலைகளில் சகல துறைகளிலும் சிறந்ததொரு ஆரம்பப் பாடசாலையாக யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையும் திகழ்கின்றது. இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு தனது ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கும் இவ்வேளையில் அதனைக் கொண்டாடும் முகமாகப் பாடசாலையால் வெளியிடப்படும் இம் மலரானது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது சிறப்பம்சமாகும்.

மலர்களை வெளியிடுவதன் மூலம் மாணவர்களின் எழுத்தாற்றல் மேம்படுத்தப்படுவதுடன் இதன் மூலம் பெறப்படும் அனுபவங்கள் மாணவர்களின் ஆளுமை விருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றன. அந்த வகையில் மாணவர்களின் ஆளுமையை வெளிக்கொணரும் இத்தகைய மலர் வெளியீடுகள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் எனக்கேட்டு மலர் வெளியீடு சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ரூபா உதயரட்ணம்**
**உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி),**
**வலிகாமம்.**



# கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்து ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கும் இவ்வேளையில் பாடசாலையால் வெளியிடப்படும் முதலாவது மலர் புது மெருகுடன் வெளிவருவதையிட்டு அக மகிழ்வடைகின்றேன்.

கல்விச் செயற்பாட்டினை விருத்தி செய்வதற்கும், மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்யவும், மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தவும் இம் மலர் வெளியீடுகள் பயன்படுகின்றன.

இம்மலரை வலுவுள்ளதாக்குவதற்கு விரிவுரையாளர், ஆசிரியர் களின் ஆக்கங்களுடன் மாணவர்களின் சுய ஆக்கங்களையும் அவர்களின் திறன்களையும் வெளிக் கொணருவதற்காக எடுத்த முயற்சி மகிழ்வுக் குரிய விடயமாகும்.

மேலும் உயர் தேசிய பரீட்சைப் பெறுபேறுகளால், இணைபாட விதானச் செயற்பாடுகளால் முத்திரை பதித்து வரும் பாடசாலையின் செயற்பாடுகளையும் பாராட்டுகின்றேன்.

இம்மலர் வெளி வருவதற்காக உழைத்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஸ்கந்தா சமூகத்திற்கு எனது பாராட்டுக்கள். இம் மலர் வெளி வர எனது வாழ்த்துக்கள்.

**திரு. தில்லைநாதன் – தர்மலிங்கம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில் கல்விக் கோட்டம்,**
**உடுவில்.**



# அதிபரது வாழ்த்துச் செய்தி

கந்தரோடையில் இந்துப் பாரம்பரியத்தை வளர்ப்பதற்காகவும், ஏழை மக்களின் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் கந்தைய வள்ளலினால் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்ப வகுப்பில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட்டது. காலப் போக்கில் அதன் ஆரம்பப் பிரிவு அரச கொள்கைக்கு இணங்கப் படிப்படியாக மூடப்பட்டது.

மீண்டும் 2005ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சமூகம் எடுத்த கடும் முயற்சிகளால் மீண்டும் ஆரம்பப் பிரிவு உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது ஆசிரியராக சிவநிதி பகீரதன் அவர்களும் காலப்போக்கில் திருமதி வேணுகா சிவகுமார் அவர்களும் செல்வி வை. சாவித்திரி போன்றவர்களும் சேர்ந்து கொண்டனர். திரு. ந.பவன் அவர்கள் தரம் 06 பகுதியின் பகுதித் தலைவராக இருந்தபடி ஆரம்பப் பிரிவின் மேற்பார்வைக் கடமைகளையும் திறம்பட ஆற்றினார். 2009ம் ஆண்டு ஆரம்பப் பிரிவின் முதலாவது தரம் 05 புலமைப் பரிசிற் பெறுபேறு வெளி வந்தது. அதில் 05 பேர் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந் தார்கள்.

2010 ஆம் ஆண்டு யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இசுறுத் திட்டத்தில் சேர்ந்த பொழுது அதன் ஆரம்பப் பிரிவே யா/ஸ்கந்தவ ரோதயா ஆரம்பப் பாடசாலை என்ற புதிய பாடசாலையாக வலிகாமம் கல்வி வலயத்தில் தோற்றம் பெற்றது. இதன் அடையாள இலக்கம் 9494 ஆகும். இதன் முதல் அதிபராக நானும் என்னுடன் இணைந்த வகையில் 10 ஆசிரியர்களும் அங்கு கடமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். அப்போதைய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மேற்குப் புற நுழைவாயிலாகச் செல்லும் பாதையின் மேற்குப் புறமான பகுதி ஆரம்பப் பாடசாலைக்குரியது எனவும்; நூலகத்தை இரு பாடசாலைகளும் பொதுவாகப் பயன்படுத்த வேண்டும் என்றும்; காலப்போக்கில் அது

ஆரம்பப் பாடசாலைக்குக் கையளிக்க வேண்டும் எனவும் வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கிச் சென்றார். இரு பாடசாலைகளது சமூக செயற்பாட்டிற்காக இரு பாடசாலை அதிபர்களாலும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் செய்யப்பட்டது.

பல கனவுகளுடன் அங்கு கடமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட பின்னர் அங்கு எதனையும் நிறைவேற்ற முடியாத வகையில் பல்வேறு நெருக்கடிகள் தரப்பட்டன. எமது பாடசாலை விரைவாக எழுச்சி பெற்று வருவது சிலருக்கு மன உழைச்சலை ஏற்படுத்தியது. அதற்கு ஏற்ப பல நுட்பமான உத்திகளைக் கையாண்டு எமது பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வசதிகள் அந்த அந்த வேளைகளில் கிடைப்பதை பல வழிகளில் தடுத்தனர். அத்தனை தடைகளையும் வெற்றி கொண்டு இன்று எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தில் அத்தனை வளங்களுடனும் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

கல்விச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடு களிலும் அதற்குத் தனியான இடம் உண்டு. மாகாணமட்டம் வரை எமது மாணவர்களின் பதிவுகள் உண்டு. எமது பாடசாலை வளர்ச்சிக்கு எமது ஆசிரியர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவை முக்கிய காரணமாகும். மேலும் ஸ்கந்தா சமூகம் மிகத் தாராளமாக எல்லா வழிகளிலும் உதவியுள்ளது. ஆங்கிலக் கல்வியிலும் தகவல் தொழில் நுட்பத் துறையிலும் ஆரம்பக் கல்வியில் இருந்தே வளர வேண்டிய தேவையைத் தற்போதைய சமூகம் உணர்ந்துள்ளது. அதற்கு ஏற்ப எமது பாடசாலையும் வளர எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானின் அருளை வேண்டுகின்றேன். எமது பாடசாலை வளர்ச்சிக்கு உதவிய பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்வித் திணைக்கள அதிகாரிகள் அனைவருக்கும் நன்றிகள்.

வ. நந்தீஸ்வரன்

அதிபர்

# ஆசியுரை



2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை தனது ஐந்தாவது அகவையில் கால் எடுத்து வைக்கும் போது சிறப்பான மலரொன்று வெளிவருவது பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெருங்கிராமமாகிய கந்தரோடையில் திகழ்ந்து கொண்டிருக்கும் ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் ஒளி விளக்காகும் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது.

"கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை"

என்று வள்ளுவர் குறிப்பிடும் கல்விச் செல்வம், இப்பாடசாலையால் வழங்கப்பட்டு வருவதை வருடந்தோறும் நடைபெறும் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பலர் சித்தியடைவதிலிருந்து அறியலாம். அன்றியும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னணி வகிப்பதும் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறுவர் அரங்கு போட்டி நிகழ்வில் "நல்ல நண்பர்கள்" என்ற நாடகம் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கன.

மிகக் குறுகிய காலத்தில் இப்பாடசாலை சாதனைகள் படைத்துள் ளதை யாவரும் அறிவர். இவைகளுக்கெல்லாம் காரணமாகவிருக்கின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

இம்மலரில் கல்விச் சமூகத்தினரதும் மாணவர்களினதும் பயன்தரக் கூடிய ஆக்கங்கள் இடம் பெறுவது சாலச் சிறந்தது.

கல்வி அதிகாரிகளினதும் பெற்றோர்களினதும் மாணவர்களினதும் நன்மதிப்பைப்பெற்று விளங்கும் இப்பாடசாலை சகல செயற்பாடுகளிலும் மென்மேலும் சிறந்து விளங்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து மலர் சிறப்புற எனது ஆசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

**செல்வி வை. சாவித்திரி**
**(உப அதிபர்)**



# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நவீன உலகின் பரிமாணங்களுக்கு ஏற்ப பண்புசார் மாணவ சமுகத்தை உருவாக்குகின்ற கல்விப் பணியில் ஈடுபடும் யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதோடு மட்டுமல்லாது நல்ல ஒழுக்க விழுமியங்களையும் புகட்டும் இக்கல்விச்சாலையானது கற்றல் செயற்பாடுகளிலும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் வளர்ந்து வருகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

2010 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையானது ஆரம்பத்தில் பௌதீக வளம் தொடர்பில் சில இடர்பாடுகளை எதிர் கொண்ட போதும் தற்போது அவற்றில் எல்லாம் வெற்றி கண்டு தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து வீறு நடை போடுகின்றது. நான்கு வருட நிறைவில் இம்மலரானது வெளி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கடந்த நான்கு வருடங்களிலும் எமது பாடசாலையானது கற்றல் செயற்பாட்டிலும் சரி இணைபாடவிதானச் செயற்பாட்டிலும் சரி பல சாதனைகள் படைத்துள்ளமையைக் காண முடிகிறது. இத்தகைய சாதனைகளுக்கு மாணவர்களின் திறமையும் அவர்களை வழி நடாத்துகின்ற அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர்களின் அளப்பரிய சேவையும் விடா முயற்சியும் தியாக மனப்பான்மையுமே காரணங்களாக அமைகின்றன.

"உண்மையே உயர்வு தரும்" என்ற மகுட வாசகத்தை உயிராகக் கொண்டு இயங்குகின்ற இப்பாடசாலையின் வளர்ச்சியானது மென்மேலும் வளர வேண்டும் பல நூற்றாண்டு காலம் கல்விச் சேவையாற்றி மாணவ சமுதாயத்தை இப்பாடசாலையானது உருவாக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வாழ்க ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை
வளர்க கல்விப் பணிகள்

**திருமதி ச. மகேஸ்வரன்,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**



# ஸ்கந்தாவின் இரு கண்கள்

## ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவரின் செய்தி

ஈழத்திருநாட்டில் பழமையும் பெருமையும் மிகுந்த கல்லூரிகளில் ஒன்றாகப் புகழுடன் விளங்குவது யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. சின்னத்தம்பி கந்தையா உபாத்தியாயர் அவர்களால் 06.06.1894 ஆம் ஆண்டு (தமிழுக்கு ஜய வருடம் வைகாசி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை புனர் பூச நட்சத்திரத்தில்) ஆரம்பிக் கப்பட்து.

பேரறிஞர்கள் பலர் பணி செய்த பெருமையும், பெருமைசார் அறிஞர்கள் பலரை உருவாக்கிய பெருமையும் எங்கள் கல்லூரியின் சிறப்பு அம்சமாகும். எங்கள் கல்லூரி பிரதான மண்டபம் 1927ஆம் ஆண்டு அதிகாரி நாகநாதர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மகாத்மா காந்தி உரையாற்றியதும் இந்த மண்டபத்திலாகும். எங்கள் கல்லூரி 1961ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் அகில இலங்கையில் மூன்றாவது இடத்தையும் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதியில் சிகரத்தின் உச்சியை எட்டியது. ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முத்திரை பதித்தது. ஆனால் பல காரணங்களால் கல்லூரியின் வளர்ச்சி பின்பு குறைவடையத் தொடங்கியது. அதில் முக்கிய காரணி ஊட்டப்பாடசாலை அன்று இல்லாமையாகும். இதை நிவர்த்தி செய்ய 1990ஆம் ஆண்டு முதல் முயற்சி செய்தோம். 1993ஆம் ஆண்டு கிடைத்தும் 2005ஆம் ஆண்டு மீண்டும் ஸ்கந்தாவில் அரம்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஒத்துழைத்த அனைத்து தரப்பினருக்கும் நன்றிகள்.

இதன் பெறுபேறுகளால் சிரேஸ்ட கல்லூரிக்கு 2009 முதல் தரமான மாணவர்கள் உள்ளீடாகக் கிடைத்து வருகின்றனர். இதுவரை ஏறக்குறைய 240 மாணவர்கள் உள்ளீடாகவும் அதில் 40 மாணவர்கள் தரம் 05 புலமைப்பிரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தி

அடைந்தவர்கள் ஆவார். இதற்கு 2010ஆம் ஆண்டு வரை உழைத்த திரு. ந. பவன், Special Trained primary, BA, Dip in Edu, MA. அவர்களுக்கும் 2010 முதல் இன்று வரை யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் முதல் அதிபராக கடமை ஆற்றி வரும் திரு.வ.நந்தீஸ்வரன் (B.BA (Hons) Dip. in.Edu, M.Ed(Merit),SLPL- 2-II ) அவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து செயலாற்றும் ஆசிரியர்களுக்கும் ஸ்கந்தா சமூகம் சார்பில் நன்றியுடன் வாழ்த்துக்களையும் தெரியப்படுத்துகின்றேன்.

ஏழை மாணவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் சிரேஸ்ட கல்லூரியை வளர்ப்பதற்குமாக உருவாக்கப்பட்ட இப்பாடசாலை இன்று தனது பாரம்பரியத்தைக் காத்து நிற்பதும், பாட, இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் முன்னின்று வருவதும் மன நிறைவைத் தருகின்றது. இன்று வரை இப்பாடசாலையிலிருந்து 240 மாணவர்களும் அதில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற 40 மாணவர்களும் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் கல்வி கற்பது இவ் ஆரம்பப்பாடசாலை தனது பணியை செவ்வனவே நிறைவேற்றியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இப்பாடசாலை மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சேது விபுலானந்தா
(தலைவர் யா /ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை
பழைய மாணவர் சங்கம்,
உப தலைவர் கொழும்பு, யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நிர்வாக சபை உறுப்பினர்)



## யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை நான்காம் ஆண்டு நிறைவு விழா

"எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்ற முதுமொழிக்கமைவாக எங்கள் யா/ஸ்கந்தா அன்னை யின் கல்வி வளர்ச்சியில் உயர் நிலை அடைந்து வருவதற்கு எங்கள் ஆரம்பப் பாடசாலை மிகச் சிறந்த அத்திபாரமாக இருக்கின்றது. என்று சொல்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இப்பிள்ளைகள் அடுத்த வருடம் G.C.E (O/L) பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவார்கள் என்பதில் எவ்விதமும் சந்தேகமில்லை.

இசுறு மற்றும் ஆரம்பப் பாடசாலைத் திட்டத்தின் கீழ் பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்ட யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை அதிபர் வ. நந்தீஸ்வரன் அவர்களின் திறமை மிக்க ஆளுமையும் அவருடன் இணைந்து செயலாற்றி வரும் ஆசிரியர்களும் நல்ல உதாரணமாக இருக்கிறார்கள் என்பது மிகையாகாது.

தொலைநோக்குடன் ஸ்கந்தா சமூகத்தால் 01.01.2005 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு 2010ம் ஆண்டு யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையாக அதே வளவில் வேறான நிர்வாக அமைப்பில் இயங்கத் தொடங்கியது.

கடவுள் கடாச்சத்தால் முக்கியமாக வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு துறை அமைச்சின் செயலாளரது ஆசியுடன் ஆரம்பப் பாடசா லைக்கு அண்மையில் இருக்கும் இடத்தில் முதல் கட்டிட வேலைகள் ஆரம்பிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பள்ளிக்கூடத்திற்கான கிணறு, சுற்றுமதிலைக் கட்டித்தரப் பழைய மாணவர்கள் முன்வந்திருக்கிறார்கள். பல தரப்பட்ட தேவைக்கு மத்தியில் ஸ்கந்தா சமூகத்தின் பல உதவிகளுடனும், அதிபர் திரு.வ.நந்தீஸ்வரன் மற்றும் அவரது ஆசிரியக் குழுவினரின் விடா முயற்சியாலும் ஆரம்பப் பாடசாலை வெகு சிறப்பாக இயங்கி வருகின்றது.

உரோமாபுரி ஒரே நாளில் கட்டி முடிக்கப்படவில்லை. அதே போல் ஸ்கந்தாவின் ஆரம்பப் பாடசாலை காலக்கிரமத்தில் யாழ்ப்பாணத்தில் மிக உயர்ந்த பாடசாலையாக மாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சுப்ரமணியம் பத்மநாதன்**
**(போஷகர் , ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கம்)**



# BLESSING MESSAGE FROM THE PRESIDENT OF OSA, CANADA.

It is with great pleasure that I extend my sincere and warm wishes to Skandavarodaya Primary School, which celebrates its 4th year prize giving.

Our primary school was established in 2010 with the able leadership of our Principal, Mr. Nantheeswaran and 10 teachers. The school is situated at Kantharodai in the midst of beautiful sceneries and in a conducive environment.

Many students of the school are successful in Grade 5 scholarship exam and are obtaining more marks than national average by 20%. We are proud to know that more and more students are joining the school and the school currently has 301 students and 12 teachers.

Past pupils of Skandavarodaya College living in Canada formed the Old Students' Association in Canada to promote education and sports of students of Skandavarodaya College. The primary school produces talented students and sends them to continue their higher education at Skandavarodaya College from grade six. As old students of Skandavarodaya College living in Canada, we are proud to sponsor the annul sports events of the Skandavarodaya Primary School.

I especially appreciate the efforts of Principal, Mr. Nantheewaran and his dedication towards the development of the school and students. Finally, I congratulate Mr.Nantheewaran, teachers and students on their success.

**K. Mahendralingam,** C.G.A, C.P.A
*President*
*Skandavarodaya College*
*Old Student Association-Canada*



## ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்கும் பாடசாலை கொழும்பு – பழைய மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை ஐந்து வருடங்களுக்குள் பல சாதனைகளை ஈட்டி, பாடசாலைக்கும் அதன் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது. பாடவிதானச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எடுத்துவரும் முயற்சி பாராட்டுதற்குரியது. அதனைப் போன்று இச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கேற்று தமது ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளும் இளம் சிறார்களுக்கும், அவர்களை ஊக்குவிக்கும் பெற்றோர்களுக்கும், கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேன்மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு எமது ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கத் தயாராக உள்ளோம் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வைத்திய கலாநிதி க.சிவகுமார்**
(MBBS,DCH,MD(Peadiatrics)
**குழந்தை வைத்திய நிபுணர்**

## குறுகிய காலத்துக்குள் அதீத முன்னேற்றம்
## ஆசிரிய கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை தனது நான்காவது ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் முகமாக இந்நூலினை வெளியிடுவதனையிட்டு அதற்காக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெரு மகிழ்வடைகிறேன்.

இப்பாடசாலையானது சாதனைகளை முன்னிறுத்தி இவ் நான்கு ஆண்டுகளில் பல்வேறு ஆளுமையுள்ள மாணவர்களை உருவாக்கி யுள்ளதோடு புலமைப் பரிசில் பரீட்சையிலும் பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த பூரிப்பில் மகிழ்ந்து நிற்கின்றது.

இப்பாடசாலையின் அதீத முன்னேற்றத்திற்காகத் தலைமை தாங்கும் பாடசாலை அதிபருடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைப்பதனால் "குன்றில் இட்ட தீபம் போல" இன்று அனைவரது பார்வையும் எமது பாடசாலையின் பக்கம் திரும்பியுள்ளது. இதனால் எமது பாடசாலை மேலும் முன்னேற்றம் அடைந்து எதிர்காலத்தில் பல பெறுமதி மிக்க சிறார்களை உருவாக்கும் என்ற நம்பிக்கையுடன், இறையாசியும் இப்பாடசாலைக்குக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. தே. தேவமோகன்**
**தலைவர்**
**ஆசிரியர் கழகம்**



# இதழாசிரியர்களின் உள்ளங்களிலிருந்து.......



ஒருவனது வாழ்வு வளம்பெற வழிகாட்டுவது கல்வி. நாட்டிற்கு நன்னெறி காட்டுபவர்களாகவும், படைப்பாளிகளாகவும், பண்பு நிறைந்த சான்றோராகவும் வாழ்வதற்குக் கல்வியைக் கற்கும் போது பண்பாட்டையும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒழுக்கம் இல்லாக் கல்வியில் பயன் ஏதும் இல்லை. இத்தகைய சிறந்த கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையினது நான்காவது அகவை நிறைவிலே முதலாவது சிறப்பு மலரினை 'பரிசளிப்பு விழா' அன்று வெளியிட்டு வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம். இம்மலர் வெளியீடானது எமது பாடசாலை வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும்.

இம் மலரானது கூட்டு முயற்சியின் அறுவடையாகும். இம் மலரானது காத்திரமான ஆக்கங்கள், சமூகச் சான்றோரின் ஆசிகள், அதிபரின் அறிக்கை முதலானவற்றைத் தன்னக்தே தாங்கி வருகின்றது.

மலர் சிறப்புடன் விளங்க ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கி உதவிய அறிஞர் பெருமக்களுக்கும், சிறப்பு ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர் பகுதிக்குரிய ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும், இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும், மலர் உருவாக்கத்திற்குப் பல வழிகளிலும்

ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், உபஅதிபர் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

மேலும் விளம்பரங்கள் தந்துதவிய வங்கித்துறையினர், வர்த்தகத் துறையினருக்கும் பல்வேறு வகையில் ஆதரவு நல்கிய பெரியோர்களுக்கும் மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்ட நியூபாரதி பிறின்டேர்சினருக்கும் எமது உள மார்ந்த நன்றிகள்.

மேலும் இச்சிறப்பு மலரானது பாடசாலைச் சமூகத்தினரின் நல்வரவேற்பைப் பெறவேண்டுமெனவும் நமக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.

**இதழாசிரியர்கள்**
**திருமதி வே. சிவகுமார்,**
**திருமதி.வி.பிரதாபன்**

"ஒரு விளக்கு இன்னொரு விளக்கை ஏற்றுவதால்
அதற்கு இழப்பு ஒன்றும் இல்லை.
ஒருவன் கற்பிக்கும் போது இருவர்
கற்றுக்கொள்கின்றனர்."

- ராபட் ஹாஃப்.

"உற்பத்தி செய்யாமல் செல்வத்தை அனுபவிக்க
எவ்வாறு உரிமை இல்லையோ அவ்வாறே நாம்
மகிழ்ச்சியையும் உற்பத்தி செய்யாமல் அனுபவிக்க
நமக்கு உரிமை கிடையாது.

- ஷேக்ஸ்பியர்.

# பொருளடக்கம்

| | பக்க எண் |
|---|---|
| 01. ஸ்கந்தா ஆரம்பம் | I |
| 02. மலர் தொடர்பான அடிப்படை அம்சங்கள் | II |
| 03. பாடசாலைக்கீதம் | III |
| 04. மகுட வாசகம், தூரநோக்கு, இலட்சிய நோக்கு | IV |
| 05. ஆசிச்செய்திகளும் வாழ்த்துச்செய்திகளும் | V - XXII |
| 06. அதிபர் அறிக்கை | 1 |
| 07. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தலில் குடும்பம் மற்றும் பாடசாலைக் காரணிகளின் பங்களிப்பு | 14 |
| 08. ஆரம்பக் கல்வி என்னும் அத்திபாரம் | 21 |
| 09. ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவம் | 23 |
| 10. கல்விக்கு வறுமை தடையாகுமா ? | 27 |
| 11. அம்மா | 31 |
| 12. தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்களின் பத்துவருடமாக இடம்பெற்ற ஆங்கிலப் பதங்களும் அவற்றுக்குரிய தமிழ்க் கருத்துக்களும் | 33 |
| 13. ஒலிம்பிக் விளையாட்டு | 36 |
| 14. திருஞானசம்பந்தர் | 38 |
| 15. பூக்கள் | 39 |
| 16. இலங்கை பற்றிய சில விடயங்கள் | 40 |
| 17. பழிமொழிகளும் கருத்துக்களும் | 41 |
| 18. எனது பாடசாலை | 42 |
| 21. Festivals | 43 |
| 22. பன்னாட்டு பழமொழிகளை அறிவோம் | 44 |
| 23. அன்பான பெற்றோர் | 45 |
| 24. ஒழுக்கம் | 46 |

25. பொது அறிவுத் தகவல்கள் 49
26. சிறுவர்களுக்கான போசாக்கு உணவின் அவசியம் 51
27. மகாத்மா காந்தி 53
28. அறிவின் வளர்ச்சிக்குத் தாய்மொழி அடிப்படை 55
29. நொடியும் விடையும் 56
30. இல்ல விளையாட்டுப்போட்டிக்கு வருகை தந்த கடந்த கால விருந்தினர்கள் 58
31. பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்த கடந்த கால விருந்தினர்கள் 59
32. பாடசாலை ஆசிரிகளும் கல்வி சாரா ஊழியர்களும் 60
33. விளம்பரங்கள்

**காந்தி அடிகளின் பொன் மொழிகள்:**

* கடமையை முன்னிட்ட செயலுக்கு வெகுமதியை எதிர்பார்க்கக்கூடாது.
* தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதை விட பெரிய அவமானம் எதுவும் இல்லை.
* கண் பார்வையற்றவன் குருடன் அல்ல. தன் குற்றம் குறையை உணராமல் எவன் இருக்கிறானோ அவனே சரியான குருடன்.
* உழைப்பவர் கையில் தான் உலகம் இருக்கின்றது.
  பிறர் உழைப்பில் வாழ்பவன் ஒரு நாளும் முன்னேற முடியாது.
* தீமை வேறு, தீமை செய்தவன் வேறு என்ற பாகுபாட்டை ஒருபோதும் மறக்கக்கூடாது.

# OUR PRINCIPAL




## Mr.V.Nantheeswaran

BBA (Hons), Dip in Edu. MEd (Merit)
SLPS 2 II

# OUR VICE PRINCIPAL



Mrs.Y.Saviththiri

Spl.Trd.Primary

# Manegment Community



**PRINCIPAL**

**Mr.V.Nantheeswaran**
BBA (Hons), Dip in Edu. MEd (Merit)
SLPS 2 II



**VICE PRINCIPAL**

**Mrs.Y.Saviththiri**
Spl.Trd.Primary



**Mr.T.Thevamohan**
B.Ed, Spl.Trd.Primary



**Mrs.S.Pakeerathan**
Spl.Trd.Primary



**Mrs.V.Sivakumar**
Spl.Trd.Primary
B.com, Dip.in.Edu

# OUR STAFF - 2014



**Seated :[L-R]** திருமதி. இ. ஸ்ரீஸ்காந்தருபன் திருமதி. வே. சிவகுமார் திரு. தி.சுகுமாரன் திரு. தே.தேவமோகன் திரு.வ. நந்தீஸ்வரன் (அதிபர்) செல்வி. வை. சாவித்திரி (உபஅதிபர்) திருமதி. சி. பகீரதன்

**1st Row Standing :[L-R]** திரு. ந.திருநாவுக்கரசு ( காவலாளி ) செல்வி. அ. அன்றுஜா செல்வி. மா. தர்மினி திருமதி. வ. கேதீஸ்வரன் திருமதி. கி.இன்பராஜ் திருமதி. லோ. பாலகிருஸ்ணன் திருமதி. வி. பிரதாபன் திருமதி. சி.அருந்ததி திருமதி. பூ. ரமேஸ்குமார் திருமதி. அ. உதயகுமார் செல்வி.சி. சிந்துஜா செல்வி.த. சுபோதினி



மேலைத்தேய
வாத்திய அணி

மாணவ முதல்வர்கள்





உற்பத்தித்திறன்
சங்கம்

சுகாதார மன்றம்





ஆசிரியர் கழகம்



சாரணர் மன்றம்



இந்துமாமன்றம்



ஆங்கில மன்றம்

# Skanda OSA Canada



**Seated: Left to Right:** Mrs. Kasthuri Mahalingam, Mrs. Juditha Sathikumar, Mrs. Vimalakumary Mahendran (Vice President), Mr. R. Raveendravarman (Patron), Mr. K. Mahendralingam (Secretary), Mr. V. Paramsothy (President), Mr. Nada G. Nadarajah (Patron), Mrs. T. Kulakunasakthy (Asst. Secretary), Mrs. Jeyadevi Sivapathasundaram.

**Standing: Left to Right:** Mr. A Karunakaran, Mr. Shankar Manickam, Mr. Karu Kandiah, Mr. M. Poologarajah, Mr. C.A. Rubasingam, Mr. T. Chandrakumar (Treasurer), Mr. S. Gangesan (Asst. Treasurer), Mr. M. Sivakumaran, Mr. S. Thambon, Mr. P. Paramanathan, Mr. M. Sahadeva, Mr. M. Jeevaratnam, Mr. R. Murunthan, Mr. T. Sivapathasundaram.

**Absentees:** Mr. M.Vasavithasan (Patron), Mr. Anton Sandrasagara, Mr. S. Chitsabesan, Mr. N. Chandrarajah, Mr. K.S. Ananthan, Mr. N. Thayalan

# School Development Commitee



**Seated :[L-R]** திரு.ஜெ.அஸ்வன் திரு.ந.தயாபரன் செல்வி. வை.சாவித்திரி ( உபஅதிபர் - உப தலைவர்)
திரு.ஸ. நந்தீஸ்வரன் (அதிபர் - தலைவர்) திரு. சேது.விபுலானந்தா திரு.வி .விக்னேஸ்வரன் திருமதி.ச.மகேஸ்வரன் (செயலாளர்)

**1st Row Standing :[L-R]** திருமதி. வ.கேதீஸ்வரன் திருமதி . சி.பவிதன் திரு. தே.தேவமோகன் திரு. இ.பாக்கியநாதன்
திருமதி .ஜோ.பாலசிறுஸ்ணன் திருமதி .கே. ஜெயரூபி

# Skandavarodaya Primary School Old Student Association



Seated :[L-R] திரு. அ.செல்வேந்திரபால் திரு. பா. சுதாகரன் திரு.ந.தயாபரன் (செயலாளர்) திரு.வ. நந்தீஸ்வரன் (அதிபர் - காப்பாளர்)
திரு. சேது.விபுலானந்தா ( தலைவர் ) திரு. தே.தேவமோகன் திருமதி.லோ.பாலகிருஸ்ணன் (பொருளாளர்)
1st Row Standing :[L-R] திருமதி. க.கிருஸ்ணராணி திரு. வி.விக்னேஸ்வரன் திரு. ஜெ.அஜிவன் திரு. த. அன்ரன் செல்வகுமார்
திருமதி. கி.இன்பராணி திரு.ந.வரதயோகன்

# Skandavarodaya College Old Student Association - Colombo



**SEATED** ***(Left to Right)***

Mr. M.V. Vazavan *(Vice President)*, Dr.A. Shakthevale *(Vice President)*, Mr. Sethu Vipulananda *(Vice President)*, Mr. M. Sukumaran *(Secretary)*, Dr. K. Sivakumar *(President)*, Mr. P. Anandarajan *(Treasurer)*, Mr. S. Pathmanathan *(Vice President)*, Mr. Karunainainthan *(Vice President)*, Mrs. S. Yogarajah.

**STANDING** ***(Left to Right)***

Mr. A. R. Balasiridaran, Mr. S. Mahendran, Mr.S. Selvakumar *(Asst.Treasurer)*, Mr. M. Sathananthan , Mr. T . Ariyaratnam, Mr. R. Rajavijayan *(Asst. Secretary)*, Mr. K. Eraivan, Mr. S. P. Sivagnanam, Mr. M. Dhayalan

**ABSENT** Mr .T . Kugadas

# அதிபர் அறிக்கை

எமது பாடசாலையை வழிநடத்திக்கொண்டிருக்கும் ஸ்கந்தப் பெருமானை முதற்கண் பிரார்த்தித்து, இன்றைய விழாவுக்கு எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள பெருமதிப்புக்கும் அன்புக்குமுரிய Dr.அ.சக்திவேல் (ஸ்கந்தவரோதயன்) அவர்களே, அவர் தம் பாரியார் திருமதி.க.சக்திவேல் அவர்களே, ஆசியுரை வழங்க இருக்கும் பிரம்மஸ்ரீ.இ.சோமேஸ்வரசர்மா (பிரதம குருக்கள், ஸ்கந்தன் ஆலயம்) அவர்களே, சிறப்பு விருந்தினர் திரு.தி.தர்மலிங்கம் (கோட்டக்கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக் கோட்டம்) அவர்களே, நினைவுப்பேருரை ஆற்ற வந்துள்ள திரு. கனக.புவனேந்திரநாதன் (ஸ்கந்தவரோதயன்) அவர்களே, வெளியீட்டுரை ஆற்ற வந்துள்ள திரு.சி.சிவஞானராஜா (இளைப்பாறிய இசை ஆசிரியர்) அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, ஸ்கந்தா பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலை நலன் விரும்பிகளே, மகிழ்ச்சி பொங்க வீற்றிருக்கும் மாணவ மணிகளே, உங்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான வணக்கங்கள்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் Dr.அ.சக்திவேல் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள் ஸ்கந்தாவின் புகழ்பூத்த பழைய மாணவர். இவர் புகழ்பூத்த அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் காலத்தில் 1951 தொடக்கம் 1960 வரை கல்விகற்றவர். இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலே ஆரம்பப்பிரிவு இருந்த காலத்தில் மூன்றாம் வகுப்பிலிருந்து கல்வி கற்று, பல்கலைக்கழகத்துக்கு விவசாய விஞ்ஞானத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1962 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி விலங்கியல் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றவர். 1982 ஆம் ஆண்டு விவசாயப்பொருளியல் துறையில் பட்டப்பின் கல்வியையும் பெற்றுக்கொண்டவர். 2005 ஆம் ஆண்டு வடமாகாண சபையின் புணரமைப்பு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளராகவும், 2004 - 2009 ஆண்டு வரை இலங்கை சுதந்திர நிதி ஆணைக் குழுவின் அங்கத்தவராகவும் பதவி வகித்தவர்.

இவர் தற்பொழுது Consultant, Department of animal science, University of Jaffna ஆக உயர் பதவி வகிக்கின்றார். இவர் ஸ்கந்தா கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவராவார். இவர் பல்வேறு கம்பனிகளில், பல்வேறு அமைப்புக்களில் இயக்குநராக, ஆலோசகராக உயர் பதவி வகித்தவர். இவரது கடும் முயற்சியினாலேயே 2005 ஆம் ஆண்டு மீண்டும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆரம்பப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இவர் தம் பாரியார் திருமதி.கமலேஸ்வரி சக்திவேல் அவர்கள் வேம்படி மகளிர் உயர் பாடசாலையில் கல்விகற்றவர். இவரது உயர்வுக்கெல்லாம் பக்கத் துணையாக இருந்து உதவுபவர். இவர்களது வருகையையிட்டு எமது பாடசாலைச் சமூகம் பெருமகிழ்வடைகின்றது. இவர்களது கரங்களால் எமது மாணவர்கள் பரிசில்களைப் பெற ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர் உயர் திரு.தி.தர்மலிங்கம் அவர்கள் மாகாணக் கல்வித்திணைக்களத்திலே தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றித் தற்பொழுது எமது பாடசாலை அமைந் துள்ள உடுவில் கல்விக்கோட்டத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளராக பதவியேற்று எமது கோட்டத்தின் அத்தனை பாடசாலைகளுக்கும் அடிக்கடி வருகை தந்து பாடசாலைச் செயற்பாடுகளை வளப்படுத்துபவர். தமது அன்பான வழிநடத்தல் ஊடாக எல்லோரது அன்புக்கும் உரியவராகச் செயற்படுகின்றார். இவர் எமது பாடசாலையின் பல்வேறு குறைபாடு களையும் கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துக் கூறி அவற்றை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் நன்றிக் கடன்பட்டவர்கள்.

இன்றைய விழாவில் நினைவுப் பேருரை ஆற்ற வந்திருக்கும் திரு.கனக.புவனேந்திரநாதன் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியிலே ஆரம்ப பிரிவு இருந்த காலத்தில் தரம் 4 இல் இருந்து கல்வி கற்றவர். அவர் தனது கல்விக்காலத்திலே 1956 ஆம் ஆண்டு 9 அடி 6 அங்குலம் பாய்ந்து கோலூன்றிப் பாய்தலிலே சாதனை படைத்தவர். இவர் 1960 ஆம் ஆண்டு தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியர் நியமனம் பெற்றவர். பின்னர் பல்வேறு பாடசாலைகளில் கல்வி கற்பித்து 1973 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக பாடசாலை இடம் பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தென்மராட்சியில் செயற்பட்ட போது பதில் அதிபராகவும் கடமையாற்றியவர். முன்னாள் அதிபர் திரு.P.நாகரட்ணம் காலத்தில் பாடசாலையிலே ஸ்கந்தன் கோவிலை நிர்மாணித்து அதனை திறம்படப் பராமரித்து வந்தவர். நான் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலே வர்த்தக ஆசிரியராக இருந்த போது எமது மாணவர்களது உயர் பெறுபேறுகளை யெல்லாம் அகமகிழ்ந்து பாராட்டியவர். இவரது மகன் டாக்டர்.பு.ஆதவன் அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்று புகழ்பூத்த வைத்தியராக கொழும்பு மாநகரில் கடமையாற்றுகின்றார். அவரது சேவை பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இரு தடவைகள் கிடைத்ததை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இவரது ஏனைய பிள்ளைகளும் மனைவியும் கூட ஸ்கந்தாவிலேயே கல்வி கற்றவர்கள். பாடசாலை வரலாற்றை நன்கு அறிந்த ஒருவர் நினைவுப் பேருரை ஆற்ற வந்திருப்பது மிகப் பொருத்தமானது.

இன்று வெளியீட்டுரை ஆற்ற வந்திருக்கும் திரு.சி.சிவஞானராஜா அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றியவர். இசை ஆசிரியராக இருந்து தனது இசையினால் எல்லோரையும் மகிழ்வித்தவர். ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் பாடசாலைக் கீதமும் இவராலேயே இயற்றப்பட்டது. எமது பாடசாலையில் நான்கு வருடச் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் பல்வேறு தரப்பினரது ஆக்கங்களையும் உள்ளடக்கி வெளிவரும் எமது முதலாவது இதழை இவரால் வெளியிடப்படுவது எமக்குப் பெருமையளிக்கின்றது.

## எமது பாடசாலை

வலிகாமக் கல்வி வலயத்தில் தற்போது சிறந்த கல்விப் பெறுபேறுகள், இணை பாடவிதானப் பெறுபேறுகளைப் பெற்றுவரும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலை மாறி வருகின்றது. இம்முறையும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஒன்பது மாணவர்கள்

சித்திபெற்று மீண்டும் சிறந்த பாடசாலை என்பதை நிரூபித்துள்ளனர். 30 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்.

## இன்றைய நிகழ்வில்....

1. இன்றைய நிகழ்வில் பாடரீதியாக 94 பேரும்
2. குடும்பமட்ட, கோட்டமட்ட, வலய மட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய 24 மாணவர்கள் பரிசில்களைப் பெற உள்ளனர்.
3. விளையாட்டுத் துறையில் சிறந்த திறமையைக் காட்டிய 4 மாணவர்கள் கேடயம் பெறுகின்றனர்.
4. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுயர் புள்ளி பெற்ற மாணவியும், சகல துறைப் பெறுபேறுக்காக 2 பேருமாக 3 பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படுகின்றது.

## புலமைப்பரிசில் பரீட்சை –2014

2014 ஆகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 9 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்து சாதனை புரிந்தனர். மேலும் 30 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று தமது திறமையை நிரூபித்தனர். இப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 76% ஆனவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தனர்.

இத்தகைய உயர் சாதனை புரிய வழி காட்டிய வகுப்பாசிரியர் களான செல்வி.வை.சாவித்திரி, திரு.தே.தேவமோகன் ஆகியோரையும் ஏனைய ஆசிரியர்களான திருமதி.வே.சிவகுமார், திருமதி.சிவநிதி பகீரதன், திருமதி.லோகினி பாலகிருஸ்ணன், திருமதி.விமலாதேவி சர்வானந்தசிவம், திருமதி. இராஜேஸ்வரி சிறீஸ்காந்தரூபன், திருமதி.வ.கேதீஸ்வரன், திருமதி.C.T.இன்பராஜ், திருமதி.விஜிதா பிரதாபன், திருமதி. ஏ.உதயகுமார், திருமதி.பி.ரமேஸ்குமார், R.திலக்சனா, செல்வி.த.சிந்துஜா,

T.சுதர்சினி செல்வி.S.மதுரா, செல்வி.T.சுபோதினி செல்வி. ஏ.அன்றுயா, செல்வி.மா.தர்மினி உட்பட அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் செல்வி.வை.சாவித்திரி அவர்கள் வகுப்பறைப் பொறுப்புக்களுடன் உப அதிபராக இருந்து நிர்வாகக் கடமைகளையும் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார். இவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:

எமது பாடசாலையின் அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்கு அளப்பரியது. மிகுந்த நன்றிக்குரியது. பாடசாலை அனைத்து விழாக்களும் நிகழ்வுகளும் அவர்களது உன்னத பங்களிப்பினால் சிறப்பாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

## யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கமானது 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் செயற்பாடுகள் எமது பாடசாலையின் பெரும் வளர்ச்சிக்கு உதவும் என எதிர்பார்க்கின்றோம்.

## யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம் )

மேற்படி சங்க அங்கத்தவர்கள் எமது பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்கு பரிசுப்பொருட்களை கொள்வனவுசெய்து தந்ததுடன் பரிசளிப்பு விழாவுக்கும் அதன் அங்கத்தவர்கள் நினைவுப்பரிசில்களைத் தந்து சிறப்பித்துள்ளனர்.

## யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (யாழ்ப்பாணக் கிளை)

மேற்படி சங்கத்தினர் கடந்த வருடம் போன்று இந்த வருடமும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி சிறப்பித்துள்ளனர்.

### யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்புக்கிளை)

மேற்படி சங்கத்தினர் இவ்வருடம் தமது பொதுக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளக்கூடிய ஒரு தினத்தைத் தீர்மானித்து என்னை அழைத்து எமது பாடசாலைக் குறைபாடுகள் தேவைகளைத் தெரியப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தனர். இவ்வருடமும் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த ஒவ்வொருவருக்கும் தலா 1000 ரூபா வீதமும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு தலா 500 ரூபா வீதமும் பாட ரீதியாக தரம் 1 தொடக்கம் 5 வரை திறமை காட்டிய 15 மாணவர்களுக்கு தலா 1000 ரூபா வீதமும் பரிசளித்துள்ளனர். எமது பாடசாலையிலே வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் வழங்க 10500 ரூபா பணத்தை வழங்கியுள்ளனர். மேலும் எமது பாடசாலையிலே ஆங்கில ஆசிரியர் இல்லாத குறையைப் போக்க மாதா மாதம் 7000 ரூபா வீதம் ஒரு வருடத்துக்குரிய தொகையை ஆசிரியருக்கு வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளனர். எமது பாடசாலையின் உயர் பெறுபேறுகளுக்கு ஊக்கமளிக்கின்ற மேற்படி சங்கத்தினருக்கு எமது நன்றிகள்.

### யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடாக்கிளை)

மேற்படி சங்கத்தினர் எமது பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கு ரூபா 50 000 ஐ அன்பளிப்புச் செய்து இல்ல விளையாட்டுப்போட்டி சிறப்பாக இடம்பெற உதவினர். இந்த சங்கத்தின் தலைவர் திரு.கே.மகேந்திரலிங்கம் அவர்களுக்கும் ஏனைய அங்கத்த வர்களுக்கும் எனது நன்றிகள்.

### யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அமெரிக்கக்கிளை)

மேற்படி சங்கத்தினர் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 50000 ஐ அன்பளிப்புச் செய்து மாணவர்களுக்கு பரிசில் பொருட்கள் கொள்வனவு செய்ய உதவி செய்வதாக இச்சங்கத்தின் தலைவர் திரு. க.பாலசுப்பிரமணியம் உறுதியளித்துள்ளார். இவருக்கும் எமது நன்றிகள்.

### பாடசாலை மதிய உணவுத் திட்டம்:

ஐ.நா. உலக உணவுத் திட்டத்தினால் செயற்படுத்தப்படும் மேற்படி திட்டம் எமது பாடசாலையிலும் சிறப்பாக அமுல்செய்யப்படுகின்றது. எமது மாணவர்களுக்கு இவை கிடைப்பதையிட்டு மிகுந்த மனநிறைவடைவதுடன் மேற்படி திட்டத்திற்கு நிதியுதவுபவர்களுக்கும் நன்றிகள்.

### போட்டோப் பிரதி இயந்திரம்:

எமது பாடசாலைக்கு போட்டோப் பிரதி இயந்திரம் கொள்வனவு செய்ய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ரூபா 50 000 ஐ ஒதுக்கியுள்ளார். இவருக்கும் இந்நிதி கிடைக்க உதவிய திரு.ந.தயாபரன், திரு.R.சசிவரன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

### கருத்தரங்குகள்:

தரம் 5 மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரியர் களை அழைத்து பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இந்தக் கருத்தரங்கிற்கு வருகை தந்து கருத்துரை வழங்கிய திரு.S.சுகந்தன் அவர்களுக்கும், திரு.T.தயானந்தன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

### பாடசாலை நலன் விரும்பிகள்:

மக்கள் வங்கி சுன்னாகம் கிளையினர் சிறுவர் தினத்தை முன்னிட்டு எமது பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்பு ஊக்குவிப்புப் பரிசை வழங்கினர். மேலும் இன்றைய எமது முதலாவது சிறப்பு மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, அபான்ஸ் நிறுவனம், சிங்கர் பிளஸ் நிறுவனம், ஜெயக்கிருஸ்ணா காட்வெயார், சிறிகரன் புத்தகசாலை, மது கிறீம் கவுஸ் போன்ற அமைப்புக்களுக்கும் நன்றிகள்.

## கால்கோள் விழா:

தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவுக்குப் பிரதம விருந்தினராக திரு.சிற்பி.சிவசரவணபவன் (இளைப் பாறிய அதிபர்) அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு.S.சிவகுமாரன் (இளைப்பாறிய பொருளியல் ஆசிரியர்), கௌரவ விருந்தினராக திரு.ஸ்ரீ.விஜேந்திர சர்மா உதவிக்கல்விப் பணிப்பாளர் விஞ்ஞானம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## இல்ல விளையாட்டுப்போட்டி:

2014 ஆம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டிக்கு திரு. சேது.விபுலானந்தா (ஸ்கந்தவரோதயன், உபதலைவர், கொழும்பு பழைய மாணவர் சங்கம்) அவர்களும் சிறப்பு விருந்தினாராக திரு. அ.செல்வேந்திரதாஸ் (ஸ்கந்தவரோதயன்) அவர்களும், கௌரவ விருந்தி னராக திருமதி.J.மயில்வாகனம் ( ஆசிரிய ஆலோசகர் உடுவில் கோட்டம்) அவர்களும் துறைசார் விருந்தினராக திரு.ச.யசிதரன் (ஸ்கந்தவரோதயன்) அவர்களும் கலந்து சிறப்பித்தினர். கந்தையா இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. பாடசாலை விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக திரு.தே.தேவமோகன் அவர்கள் திறம்படப் பணியாற்றி வருகின்றார். அவருக்கும் அவருடன் இணைந்து செயலாற்றிய விளையாட்டுச் செயற் குழுவிற்கும் எனது நன்றிகள்.

## ஆசிரியர் தினம்:

2014.10.07 ஆம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. அதற்குப் பிரதம விருந்தினராக திருமதி. வி.இலட்சுமணன் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு.சேது. விபுலானந்தா (தலைவர், பழைய மாணவர் சங்கம்) அவர்களும் கலந்து சிறப்பித்து ஆசிரியர்களுக்குப் பரிசளித்துக் கௌரவித்தார்கள்.

## உயர்கல்வி பெற விடுப்பில் சென்ற ஆசிரியர்:

ஆசிரியர் திருமதி.C.T.இன்பராஜ் நான்கு வருட கல்வி விடுப்பு பெற்று பட்டப் படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு வருகின்றார்

## திருமண பந்தத்தில் இணைந்த ஆசிரியர்:

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.P.ரமேஸ்குமார் இவ்வருடம் திருமண பந்தத்தில் இணைந்தார். இவர் சகல செளபாக்கியங்களும் பெற்று இன்புடன் வாழ எமது வாழ்த்துக்கள்.

## உயர் கல்வி பெறுபேறு பெற்ற ஆசிரியர் :

ஆசிரியர் திரு.தே.தேவமோகன் கல்வியியல் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

## புதிதாக இணைந்த ஆசிரியர்கள்:

ஆசிரியர்கள் திருமதி.P.றமேஸ்குமார், திருமதி. A.உதயகுமார் ஆகிய இருவரையும் பாடசாலைச் சமூகம் அன்புடன் வரவேற்கின்றது. இவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவையை பாடசாலை எதிர் பார்க்கின்றது.

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் :

திருமதி.விமலாதேவி சர்வானந்த சிவம் எமது பாடசாலையிலிருந்து இவ்வருடம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் எமது பாட சாலையின் சீருடை வழங்கல், விசேட கல்விச் செயற்பாடுகளில் பொறுப்புடன் செயற்பட்டவர். மிக ஒழுங்காகப் பாடசாலைக்கு வருகை தரும் இவ் ஆசிரியரது சேவையைப் பாராட்டு வதுடன் சென்ற இடத்தில் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

## தொண்டர் ஆசிரியர்கள்.

ஆங்கில ஆசிரியர் இல்லாது கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு அடைந்த வேளை எங்களுக்குக் கைகொடுத்தவர் செல்வி.அ.அன்றுயா ஆசிரியர் அவர்களுக்கும் மேலும் செல்வி. த.சிந்துஜா(I.C.T), செல்வி. R.திலக்கசனா, செல்வி.T.சுபோதினி, செல்வி.மா.தர்மினி ஆகியோர் எமது பாடசாலைக் கல்விச் செயற்பாட்டிற்குத் தூய்மையான சேவை செய்து வருகின்றனர். மேலும் எமது பாடசாலையில் சேவையாற்றித் தற்பொழுது துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ள செல்வி S.மதுரா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

## எமது பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்:

### மாணவர் மன்றம்

தலைவர்: செல்வன்.சா.கலியுகன்
செயலாளர் : செல்வி.கே.டிலானி
பொருளாளர்: செல்வன்.ம.கஜன்
பொறுப்பாசிரியர் : திருமதி.வி.பிரதாபன்

### சாரணர் இயக்கம்:

தலைவர்: செல்வன்.பா.நிவேகாஷ்
செயலாளர்: செல்வன்.வி.புருசோத்மன்
பொருளாளர்: செல்வன்.த.பிரியதரன்
பொறுப்பாசிரியர்: திருமதி.வ.கேதீஸ்வரன்

### இந்து மன்றம்

தலைவர்: செல்வன்.இ.கேசவன்
செயலாளர் : செல்வன்.ஜெ.சர்வித்
பொருளாளர்: செல்வன்.மோ.மதுரன்
பொறுப்பாசிரியர் : திருமதி.லோ.பாலகிருஸ்ணன்

### கிறிஸ்தவமன்றம்

தலைவர்: செல்வன்.செ.தேனுஜன்
செயலாளர் : செல்வன்.இ.றஸ்மிதன்
பொருளாளர்: செல்வன்.ந.அலன்
பொறுப்பாசிரியர் : திருமதி.சி.பகீரதன்

### சுகாதார மன்றம்

தலைவர்: செல்வன்.இ.யதுசன்
செயலாளர் : செலவன்.கி.தர்சிகன்
பொருளாளர்: செல்வி.கி.தர்மிகா
பொறுப்பாசிரியர் : திரு.தி.சுகுமாரன்

## ஆங்கில மன்றம்

தலைவர்: செல்வன்.ஜெ.சர்வின்

செயலாளர் : செல்வன்.அ.கஜன்

பொருளாளர்: செல்வி.சி.யதுசாயினி

பொறுப்பாசிரியர் : திருமதி.அ.உதயகுமார்

## உற்பத்தித்திறன் சங்கம்:

தலைவர்: செல்வி.சு.தனுரா

செயலாளர் : செல்வி.ஜெ.சுவேதினி

பொருளாளர்:செல்வன்.ப.அகராயுதன்

பொறுப்பாசிரியர்:திருமதி.வி.பிரதாபன்

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம்:

தலைவர்: திரு.வ.நந்தீஸ்வரன் (அதிபர்)

உப தலைவர்: செல்வி.வை.சாவித்திரி ( உப அதிபர் )

பொருளாளர்: திருமதி.சி.பகீரதன் ( ஆசிரியர்)

செயலாளர்: திருமதி.ச.மகேஸ்வரன்

கணக்காய்வாளர்: திரு.ந.தயாபரன்

## பாடசாலை பழைய மாணவர் சங்கம்:

தலைவர்: திரு.சேது.விபுலானந்தா

செயலாளர் : திரு.N.தயாபரன்

பொருளாளர்: திருமதி.லோ.பாலகிருஸ்னன்

போசகர் : திரு.வ.நந்தீஸ்வரன் (அதிபர்)

## விளையாட்டுச்செயற்குழு

தலைவர்: திரு.வ.நந்தீஸ்வரன் (அதிபர்)

உபதலைவர்:செல்வி.வை.சாவித்திரி (உபஅதிபர்)

செயலாளர் : திரு.தே.தேவமோகன்

பொருளாளர்: திருமதி.சி.பகீரதன்

செயற்குழு உறுப்பினர்கள்: திருமதி.வே.சிவகுமார், திருமதி.வி.பிரதாபன்
செல்வி.க.சிந்துஜா

## பாடசாலைத் தேவைகள்:

பாடசாலை மிகக்குறைந்த வசதிகளுடன் கையளிக்கப்பட்டது. எனவே ஒரு பாடசாலையின் சுதந்திரமான சீரான இயக்கத்துக்கு எவை அவசியமோ அவை எல்லாம் இப் பாடசாலைக்கும் அவசிய தேவையாகும். குறிப்பாக,

1) தொலைக்காட்சி (T.V)பெட்டி
2) நூலகத்திற்கான நூல்கள், நூலக தளபாட வசதிகள்
3) English as a life skill திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த பாதுகாப்பான செழுமையான அறை
4) பாடசாலை கட்டடங்களின் நிலம் (floor) சீர்செய்யப்பட வேண்டும்.
5) பாடசாலைக்கு வர்ணம் பூசப்பட வேண்டும்.

மிக முக்கியமாக பாடசாலை காணி வரைபடம் வரைந்து தரப்பட வேண்டும். பாடசாலை தொடர்பாக வருடாந்த பொருட்கணக்கெடுப்பு பணி, தொகை மதிப்பீடு பணிகளில் எல்லாம் மிகுந்த பிரச்சினைக்குரிய விடயம் இந்தக் காணி வரைபடமாகும். எமது பாடசாலையினை புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டபடியும் இசுறுதிட்ட உடன்படிக்கையில் ஸ்கந்தா சமூகம் ஏற்றுக்கொண்ட படியும் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் மேற்குப்புற நுழை வாயிலூடாகச் செல்லும் பாதையின் மேற்குப் புறமாக உள்ள பகுதியில் சுதந்திரமாக இயங்கிவருகின்றது. தற்பொழுது எமது ஆரம்ப பாடசாலைச் சமூகத்தின் விருப்பத்திற்கு மாறாக பாடசாலையினை வேறு இடத்திற்கு நகர்த்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தால் வரக்கூடிய பாதிப்புகளுக்கு அதை முன்னின்று செயற்படுத்துபவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

## எமது பாடசாலைச் சிறப்பு மலர்:

எமது பாடசாலையின் கடந்த நான்கு வருட பெறுபேறுகளை உள்ளடக்கி மாணவர்களதும் ஆசியர்களதும் மற்றும் விரிவுரையாளர்களது கட்டுரைகளை உள்ளடக்கி முதலாவது சிறப்பு மலரை இன்று வெளியிடுகின்றோம். இந்த வெளியீடு தொடர்பாக முன்னின்று உழைத்த மலர்க்குழுவிற்கு மனமார்ந்த நன்றிகள்.

## எனது நோக்கில்.

எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தின் முன்னணி பாடசாலையாக மாறி வருகின்றது. இம்முறை 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுயர் சித்தி வீதம் பெற்ற பாடசாலை வரிசையில் எமது பாடசாலையும் இடம்பிடித்துள்ளது. சகல போட்டி களிலும் பங்குபற்றி கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் எமது மாணவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். எதிர்காலத்தில் சகல துறைகளிலும் எமது பாடசாலை சாதனைகள் புரியும் என உறுதி கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

\- நன்றி -

**"பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால்,**
**அது வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேரும்."**

**– சுவாமி விவேகானந்தர்.**

**"உன்னை நீயே பலவீனமென்று நினைத்துக் கொள்வது**
**மிகப்பெரிய பாவம், மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை**
**அவனது நாவில் இருந்து தான் பிறக்கின்றன."**

**– நபிகள் நாயகம்.**

**"ஒவ்வொரு தினமும் வெற்றித் திருநாளாக அமைய வேண்டுமெனின்**
**ஒவ்வொரு நொடியும் விடாமுயற்சி செய்யுங்கள்."**



# குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தலில் குடும்பம் மற்றும் பாடசாலைக் காரணிகளின் பங்கேற்பு

*கலாநிதி (திருமதி ஜெ. இராசநாயகம் )*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*கல்வியியற்துறை*
*யாழ். பல்கலைக்கழகம்*

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலில் இன்று பல அமைப்புக்கள் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. குழந்தைகளின் முழுமையான பாதுகாப்பு என்பதைக் கருத்திற் கொண்டு அவர்களிடம் அன்பு காட்டி அவர்களை எதிர்கால வாழ்விற்குத் தயாராக்க முழு உலகமும் ஆர்வம் கொண்டுள்ளன. இவ்வுலகைப் பிள்ளைகளுக்குச் சிறந்த இடமாக மாற்றிக் கொடுப்பதில் ஒவ்வொரு தனி மகனும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். பிள்ளைகளின் அதிகூடிய பாதுகாப்பை எப்போதும் வழங்குபவர்களாகப் பெற்றோர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். ஆயினும் பெற்றோரின் பாதுகாப்பிற்கு அப்பால் பாடசாலைகள், சமுதாய அமைப்புக்களின் பங்களிப்பும் இவ்விடயங்களின் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாகப் பல இடங்களில் பல விடயங்கள் உண்மையில் கோட்பாட்டளவில் பேசப்பட்டுத்தான் வருகின்றன. இது பேசப்படும் ஒரு விடயம் அல்ல. குழந்தைகளின் நன்மை கருதி அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் பொறுப்பைப் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது பெரியதொரு சமூகப் பொறுப்பாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவலானது உலகிலுள்ள பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதில்லை என்பதே உண்மையாகும் என்ற வகையில் அமைகின்றது. பிள்ளைகள் நாள்தோறும் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, வன்முறைகள் என்பவற்றுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதோடு அதற்கு ஆளாகி வருகிறார்கள். குறிப்பாக இன்று

சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் என்பது சமூகத்தின் சகல மட்டங் களிலும் இடம் பெறுகின்ற மிகப் பெரிய பிரச்சினையாக உருப்பெற்று வருகின்றது. இத்தகைய துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமிடத்து உண்மையில் பிள்ளைகள் சரியான முறையில் அறிவூட்டல்களுக்கு ஆளாகவில்லை என்றும் இது தொடர்பாக எச்சரிக்கைப்படவில்லை என்றும் தெரிகின்றது. இத்தகைய நிலை இன்று வரைக்கும் தொடர்ந்து வருகின்றன.

ஆகவே பிள்ளைகளின் பாதுகாப்பு என்பது அவர்களது முக்கிய உரிமைகளில் ஒன்றாகும். பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள் என்ற வகையில் பிள்ளைகள் ஏதேனும் ஒரு பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள் என்பதை அறியும் நிலையில் அத்தகைய துஷ்பிரயோக ங்களில் சிக்கிக் கொள்வார்கள் என்பதை உணர்ந்து அச்சிக்கலில் இருந்து அவர்களைக் காப்பாற்றப் பெரியவர்கள் மீது பிள்ளைகள் நம்பிக்கை கொள்ளும் வகையில் அவர்கள் செயற்பாடுகள் இருக்க வேண்டும். பிள்ளைகளை இலகுவான முறையில் அணுகி அவர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளல் வேண்டும் அவர்களைப் பயமுறுத்தித் துன்பம் விளைவித்தால் அவர்கள் தமது பிரச்சினைகளை மனம் விட்டுப் பேச மாட்டார்கள்.

சிறுவர்கள் என்ற பதமானது 18 வயதிற்கு குறைந்தவர்களைக் குறித்து நிற்கின்ற போதிலும் உண்மையில் பத்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு எதுவுமே விளக்கமில்லாத பருவம் உலகம் பற்றியோ சமூகம் பற்றியோ விழிப்புணர்வு அவர்களிடம் இருக்காது. இதனால் அப்பருவத்தில் அவர்கள் சிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள். ஆகவே இப்பருவத்தில் பிள்ளைகளைச் சரியான முறையில் அறிவூட்டி வளர்த்தல் முதலில் குடும்பத்தில் பெற்றோர்களின் கடமையாகும். இந்த உலகைப் பிள்ளைகளுக்கு உரிய சிறந்த இடமாக மாற்றும் முக்கிய பொறுப்பு முதலில் பெற்றோர்களையே சாரும். பெற்றோர்களின் பாதுகாப்பிற்கு அப்பால் பாடசாலை சமுதாயம் போன்ற இடங்களிலும் பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இன்று சமூகம்

இத்தகைய பொறுப்பினைச் சரியான முறையில் நிறைவேற்றத் தவறியமையால் இன்று பிள்ளைகளுக்கு அச்சுறுத்தும் பாதுகாப்பற்ற இடங்கள் பல உள்ளன. இதனால் இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது. இதன் மூலம் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

### *சிறுவர் பாதுகாப்பு என்பது என்ன?*

சிறுவர் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு சிறுவர்களும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஆபத்தில்லாத ஒரு சூழல் ஆகும். சிறுவர்களுக்கான புறக்கணிப்புக்கள் சுரண்டல்கள் வன்முறைகள் போன்ற செயற்பாடுகளைத் தடுத்தல் அல்லது அது தொடர்பான நடவடிக்கைகள் எடுத்தல் என்பவைகள் அடங்கும். சிறுவர் பாதுகாப்பு என்னும் போது சிறுவர்கள் உடல் ரீதியாக மட்டும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் உளரீதியாகவும் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் தவிர்த்து விடுதல் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே பாதுகாப்பை வழங்கும் முகவர்களாகப் பெற்றோர்கள், குடும்பம், ஆசிரியர், பாடசாலை என்ற இரு முக்கிய வலுவூட்டமான காரணிகளின் பங்கேற்பு முக்கியமானது என்பதை எல்லோரும் கவனத்திற் கொள்ள வேண்டும். குடும்பத்தில் பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இன்று அதிகமாக உள்ளன. இது அவர்களின் மகிழச்சியான காலப்பகுதிகளைத் தொலைத்துவிடுவதாக அமைவதோடு கல்வியிலும் அக்கறை கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

### *சிறுவர்களின் பாதுகாப்பை வழங்குவதில் குடும்பம்*

சிறுவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதில் குடும்பத்தின் பங்களிப்பு அதிகமானதாகும். ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் முதல் 6 வருடங்களும் மிக முக்கியமானதாகும். ஒரு குழந்தை தனது வாழ்கைக் காலத்தில் முதல் 6 வருடங்களிலும் பெற்றுக் கொள்ளும் அறிவைத் தனது வேறெந்த 6 வருடங்களிலும் பெற்றுக் கொள்ள முடியாது என்பது ஜீன் ஜதாக்ஸ் றூசோவினது கருத்து ஆகும்.

இப் பருவத்தை ஒரு அச்சட்டைப் பருவமாகக் கொள்ளாது அதிபாதுகாப்பானதொரு பருவமாகக் கருத வேண்டும். ஆகவே இப்பருவங்கள் பெரும்பாலும் பெற்றோர்களின் அரவணைப்பில் வளரும் பருவமாகும். ஆகவே அவர்களின் உடல் உள வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துவதோடு பிள்ளைகளின் பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கும் தமது கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிய வழிமுறைகளைக் குடும்பம் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

குடும்பம் சமூகத்தின் ஆணிவேராகும். குடும்பத்தில் பிள்ளையின் எதிர்கால வாழ்க்கையைக் கருத்திற் கொண்டு பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பாக அக்கறை குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். குடும்பம் பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதிச் சில செயற்பாடுகளை ஆற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1. குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு உள்ளவர்களாயிருத்தல்.
2. வீடு சார்ந்த அச்சுறுத்தும் இடர்க் காரணிகள் பற்றித் தெரிந்து வைத்திருத்தல்.
3. பிள்ளைகளுடன் மனம் விட்டுக் கதைத்தல்.
4. கிணறு, மின்சாரம், நெருப்பு போன்ற ஆபத்தான விடயங்களில் பிள்ளைகள் தலையிடுவதைத் தவிர்த்தல்.
5. பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள் போன்ற இடங்களுக்குப் பிள்ளைகள் சென்று வருவதில் பாதுகாப்பு ஏற்படுத்தல்.
6. வீதி விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
7. இயற்கைக் காரணிகளின் ஆபத்துக்களை விளக்குதல்.
8. பாதுகாப்பற்ற சூழலில் பாதுகாப்பாகத் தப்பித்துக் கொள்ளல் தொடர்பாக அறிவுறுத்தல்.
9. கெட்ட நண்பர்கள் கூட்டம் தொடர்பாக விளக்கல்.

10. தெரியாதவர் எவராவது தரும் உணவுகளை உண்பதையோ அல்லது பானங்களையோ பருகுவதையோ தவிர்த்தல்
11. பெற்றோரின் அனுமதி இல்லாமல் எங்கும் செல்லக் கூடாது என விளக்கல்
12. பாடசாலைக்குள்ளும் பிள்ளைகளுக்குச் சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்பற்ற சூழல் எற்படலாம் என விளக்கல்.
13. சமூக வலைத் தளங்களில் அவர்கள் தொடர்பான விளக்கங்கள் புகைப்படங்கள் போன்றவற்றைப் பதிவு செய்யாதிருத்தலை உறுதிப்படுத்துதல்.
14. தேவையில்லாத தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்க்குமாறு கூறுதல்
15. பாடசாலை சென்று வரும் தனியார் வாகன சாரதி, நடத்துனர் பற்றி அவதானமாக இருத்தல்
16. வழியில் சந்தேகத்திற்கிடமான ஒருவரின் நடமாட்டம் கண்டால் பாதுகாப்பான வழிகளில் ஒன்றை ஏற்படுத்துமாறு கூறி வைத்தல்
17. பாடசாலை முடிந்ததும் நீண்ட நேரம் உங்களின் வருகைக்காக காத்திருத்தலைத் தடுத்தல்
18. தேவையான போது திடீர் முடிவுகளை எடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தல்
19. விரும்பத்தகாத இரகசியங்களைக் பாதுகாப்பாக வைத்திருத்தலைத் தவிர்க்கச் செய்தல்
20. தேவையில்லாத நபர்கள் உடலில் தொட்டுப் பேசுவதைத் தவிர்க்குமாறு கூறுதல்.
21. இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான ஆபத்துக்களைக் கூறி வையுங்கள்.
22. நஞ்சு மருந்துகளைக் கவனமாகக் பாதுகாத்தல்.
24. தேவையில்லாத பொருட்களைத் தொட வேண்டாம் என விளக்குதல்.
25. தேவையில்லாத முறையில் பணத்தினைக் கையாளுதலைத் தவிர்த்தல்.

இவ்வகையான பாதுகாப்பு முறைகளைக் குடும்பத்தில் பெற்றோர்கள் தெரிந்து வைத்திருத்தல் அவசியமானது.

இன்றைய நிலையில் ஒவ்வொரு பிள்ளையும் தம்மை எதிர் நோக்கி வரும் ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர் கொண்டு வாழும் முறைகள் பற்றிய அறிவு பெற்றோர்களால் கற்பிக்கப்பட வேண்டியது ஒன்றாகும். பாதுகாப்பற்ற சூழலில் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முழுப் பொறுப்பும் பெற்றோர்களுக்கே என்பதை உணர்ந்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும்.

***பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலில் பாடசாலைகள்.***

1. பாதுகாப்பற்ற கிணறு, சுற்றுமதில், வெளிப்புறக்கதவு தொடர்பான மிகுந்த அக்கறையுடையவர்களாக இருத்தல்.
2. சகபாடிக் குழுக்கள் தொடர்பான அக்கறையுள்ளவர்களாக இருத்தல்.
3. குடும்பம் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பான விடயங்கள் பற்றி அறிந்திருத்தல்.
4. பாடசாலை முடிவடைந்ததும் பிள்ளைகள் நீண்ட நேரம் நிற்பது தொடர்பாக கவனம் எடுத்தல்.
5. பெற்றோர்களுடனான சந்திப்பை ஒழுங்கு செய்தல்.
6. பிள்ளைகளின் சுகாதராம் தொடர்பாக அக்கறை உள்ளவர்களாக இருத்தல்.
7. விளையாட்டுக்களை ஒழுங்கு செய்யும் போது வகுப்புக்கும் வயதுக்கும் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்துக்கும் பொருத்தமான விளையாட்டுக்களைத் தெரிவு செய்தல்.
8. பிள்ளைகளுக்குப் பாடசாலை நேரத்தில் ஏற்படும் சுகயீனம் தொடர்பாகவும் அக்கறை கொள்ளல்
9. பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பாடசாலைத் தண்டனைகள் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ளல்.
10. சுற்றுலாக்களின் போது அவதானமாகச் செயற்படல்
11. வீதி விபத்துப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
12. ஆபத்துக்களிலிருந்து எப்படித் தப்புவது என்ற விளக்கம் கொடுத்தல்

13. நிறைய நண்பர்களைச் சம்பாதிக்க வேண்டுமேயொழிய பல எதிரிகளைச் சம்பாதிக்கக் கூடாது என விளக்கல்
14. தேவையில்லாத பொருட்களைத் தீண்டாதிருத்தல் என விளக்கல்
15. ஒதுங்கியிருக்கும் சிறுவர்கள் தொடர்பாக விழிப்பாக இருத்தல்.
16. உடல் சுகாதாரத்தில் அக்கறை கொள்ளும்படி விளக்குதல்.

இவ்வகையில் பாடசாலைகளில் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். குடும்பத்திற்கு அடுத்த நகர்வாகப் பாடசாலைகள் செயலாற்றுகின்றன. இதனால் பாடசாலைகளின் பணி மிகப் பெரும் பணியாகும் எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் சிறப்பான எதிர்காலத்தை கருத்திற் கொண்டு செயற்படும் போது தான் எதிர் காலத்தில் சிறந்த மாணவர்கள் உருவாகும் சந்தர்ப்பம் அதிகமாகும்.

***

**சிந்தனைக்கு :**

**புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத இருட்டறை போன்றது.**

**இரக்கம் உள்ள இதயம், சிந்தனையாற்றல் படைத்த மூளை,**
**வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய மூன்றும் நமக்குத் தேவை.**

**நம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும்.**

**"வெற்றிகரமான சாதனைகளுக்கு நான்கு அடிப்படை அம்சங்கள் அவசியம். அவை,**

**இலக்கு நிர்ணயம்**
**ஆக்கபூர்வமான சிந்தனை**
**கற்பனைக் கண்ணோட்டம்**
**நம்பிக்கை என்பனவாகும்.**

**– அப்துல் கலாம்.**

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2011



பா.சானுஜா - 183



கே.நிதர்சன் - 179



சி.சிவனுஜா - 178



ஆ.ராகுலன் - 165



கி.சங்கர்சன் - 158



உ.பிரியங்கா - 156



ச.சாரு - 155



ர.வினித் - 155



இ.மதுர்ஜா - 153



வை.ஜனோஜன் - 153



ம.ரம்மியா - 152



வி.ஜசோதரன் - 152

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2012


ம.ஹேமாதங்கி - 171


ம.மதுசுதன் - 165


த.ஷகீம் - 165


கெ.கஜப்பிரியா - 164


பே.சதுர்சன் - 161


சு.சாருமதி - 160


த.தனுசன் - 159


சி.நிசந்தன் - 153


க.பிரியதரன் - 149


பா.நிவேகாஸ் - 148

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2013



சி.சஞ்சயன் - 180



ர.பிரதாபன் - 178



ச.தீபிகன் - 178



சு.யுஸ்திகா - 170



த.எழிலினி - 166



உ.கஸ்வினி - 164



த.சாருஜா - 163



சு.அபிநயா - 159



த.தனுசன் - 157



ஜெ.அஸ்விந் - 156



செ.விகிர்தன் - 155



ச.மிலக்சா- 154

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2014



சி.இதுஷாயினி - 182



சா.கலியுகன் - 178



கே.டிலானி - 174



ம.கஜன் - 173



இ.கேசவன் - 172



ஜெ.சர்வின் - 166



கே.நிதுஷா - 162



இ.யதுர்ஷன் - 158



ர.அபிஷாயினி - 158



தரம் 1A
மாணவர்கள்

தரம் 1B
மாணவர்கள்





தரம் 2A
மாணவர்கள்

தரம் 2B
மாணவர்கள்





தரம் 3A
மாணவர்கள்



தரம் 3B
மாணவர்கள்



தரம் 4A
மாணவர்கள்



தரம் 4B
மாணவர்கள்



தரம் 5A
மாணவர்கள்



தரம் 5B
மாணவர்கள்



கிறிஸ்தவ மன்றம்



மாணவர் மன்றம்



100மீ, 75 மீ வலயமட்டம்
முதலாம் இடம் - 2011
செல்வி .க.கார்த்திகா




சிங்கள எழுத்து
வலயமட்டம் முதலாம்
இடம் - 2013
செல்வி .த.தனுரா



பண்ணிசைப் போட்டி
வலயமட்டம் முதலாம்
இடம் - 2011
செல்வி .ம.ரம்மியா



ஆங்கில சொல்வதெழுதல்
வலயமட்டம் - 1 ஆம் இடம்பெற்ற
மாணவி செல்வி இ.ஜதுசாயினி



சிங்கள விநாடி வினா வலயமட்டம்
1 ம் இடம் பெற்ற தரம் 5 மாணவர்குழு



தமிழ்மொழித்தின பேச்சுப் போட்டி
வலயமட்டத்தில் 1ம் இடம்பெற்று
மாகாண மட்டத்தில் பங்குபற்றிய
மாணவி செல்வி கே.டிலானி



துரித கணித செய்கைப் போட்டி
வலயமட்டத்தில் 2 ம் இடம் பெற்று
மாகாண மட்டத்தில் பங்குபற்றிய
மாணவன்செல்வன் ம.கஜன்



# ஆரம்பக் கல்வி என்னும் அத்திபாரம்.

*திருமதி சிவநிதி பகீரதன்*

*ஆசிரியை - யா/ ஸ்கந்தவரரோதயா ஆரம்ப பாடசாலை*

சிறந்ததொரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தது கல்வி. சமுதாயத்தின் ஊன்று கோலாக அமையும் இக்கல்வியை அனைவரும் முறையாகப் பயில வேண்டும் என்பது மூதாதையிரினதும் கல்விப் புலமை வாதிகளினதும் வேண்டுதலாகும். அந்த வகையில் கல்வி வளர்ச்சிப் படியில் ஆரம்பக் கல்வி மிகுந்த முக்கியத்தும் பெறுகின்றது. சமூக பண்பாட்டு விழுமியங்கள், ஆற்றல்கள், எழுத்தறிவு, எண்ணறிவு போன்ற பல திறன்களின் அடிப்படை வளர்பருவமாக ஒருவருக்கு ஆரம்பக் கல்வி அமைகின்றது. ஆரம்பப் பருவம் என்பது ஒரு பிள்ளை விருத்தியின் தீர்க்கமான ஒரு பருவம். பிள்ளை எதிர்காலத்தில் வெற்றிகரமான ஒரு பிரஜையாகச் செயற்படுவதற்குத் தேவையான பல ஆற்றல்களின் உருவாக்கமும் இசைவாக்கமும் இப்பருவத்திலேயே நிகழும். அதற்காகப் பிள்ளைகளின் வளர்ச்சிக்குச் சாதகமாக அதற்குத் தூண்டுகோலாக அமையத்தக்க சூழலை உருவாக்குவது இன்றியமையாதது. அதற்குச் சிறந்த அத்திபாரமாக அமைவது ஆரம்பக்கல்வி. குடும்பச் சூழலில் இருந்து முதலில் சமூகத்தில் அடி எடுத்து வைக்கும் பிள்ளை பாடசாலையிலும் தனது குடும்ப அமைப்பையே எதிர்பார்க்கின்றது. அந்த வகையில் ஒவ்வொரு ஆசிரியரும் தாய்போன்று பிள்ளையைக் காக்கும் கடமைக்குக் கட்டுப்பட்டவர்கள். தனது அயற்சூழலுடன் இடையறாது தொடர்பு கொண்டு புதிய அனுபவங்களைப் பெறுவதற்கும் அதனூடாகச் சூழல் கட்டமைப்பினை அறிவதற்கும் அதனைப் பாதுகாப்ப தற்குமான அறிவை வளர்க்கின்றது. ஏனையோரிடத்துக் கணிப்பையும், மதிப் பையும் வளர்க்கின்ற பருவம் ஆரம்பக் கல்விப் பருவம்.

இவ்வாறான பல்வேறுபட்ட சிந்தனை ஆற்றல்களுடன் பாடசாலை வருகின்ற பிள்ளை தனது ஆசிரியரைக் காணுகின்ற பொழுதில் தனது தாய்க்கு ஒப்பான அன்பினை எதிர்பார்த்து நிற்கின்றது தன்மேல் ஆசிரியர் முழுமையான அன்பினைச் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

ஆசிரியரை முன்மாதிரியாகக் கொண்டு ஆசிரியராகவே பிள்ளை மாறுகின்றது. எனவே தான் ஆரம்பக்கல்வி ஆசிரியர் முன்மாதிரியாகவும் பிள்ளையை புரிந்து கொள்ளக் கூடியவராகவும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு சிறந்த ஆசிரியர் ஒருவர் அமையும் பட்சத்தில் அப்பிள்ளை சிறந்த ஒரு பிரஜையாக மகத்துவமான வாழ்வை வாழ்வான். என்பதில் ஐயமில்லை. எனவே தான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் சிறந்த சிற்பிகளாக வர்ணிக்கப்படுகின்றனர். வெள்ளை உள்ளத்துடன் பாடசாலை வருகின்ற பிள்ளை சிறந்த நற்பண்புகளையும் தூய சிந்தனைகளையும் எதிர்காலத்தில் வளர்த்துக் கொள்வதற்கும் ஆரம்பக் கல்வி படி அமைத்துக் கொடுக்கின்றது. ஆரம்பக் கல்வி ஒரு பிள்ளையின் சுதந்திர செயற்பாட்டை வளர்க்கின்றது. என்னால் முடியும் என்னும் தன்னம்பிக்கை வளர அடிப்படையாகின்றது. ஒரு குழந்தை உறுதுணையாக, ஆரம்பக்கல்விப் பாடசாலைகள் அமைதல் வேண்டும். இவ்வாறாகத் தனியாள் ஒருவர் தான் வாழும் சமூகத்தில் ஒழுக்கம், விழுமியம் மற்றும் வாண்மைத்துவம் மிக்க பிரஜையாக மிளிரவும் தலைவராகவும் தலைவரைப் பின்பற்றுபவராகவும் தன்னை மாற்றிக் கொள்ளும் திறனையும், குழுவில் அங்கத்தவர்களை மேற்பார்வை செய்யும் ஆற்றல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்தல் போன்றவற்றின் அடித்தளமாக ஒளிர்வது ஆரம்பக் கல்விப் பருவமாகும். இந்த பருவத்தில் ஆசிரியர்களுடன் பெற்றோர்களின் பங்களிப்பும் இன்றியமையாததாக ஒன்றாகின்றது. ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளையின் கல்வியில், நடத்தையில் விழிப்புடையவர்களாக இருத்தல் வேண்டும். உலக நாடுகளில் அமெரிக்காவில் பெற்றோர் பிள்ளைகளின் வினையாற்றல் களில் பங்களிப்புச் செய்யும் வீதம் அதிகம் எனக் கூறப்படுகின்றது. எனவே சிறார்களின் கல்வியில் ஆரம்பமாக விளங்கும் ஆரம்பக் கல்வித் திறன்களை ஒவ்வொரு மாணவனும் சிறந்த முறையில் பெற்றால் எதிர்காலத்தில் முழுமையாக ஒரு சமூகத்தைக் கட்டிக்காக்கக் கூடிய திறன் பெற்றவராக விளங்குவார் என்பது உறுதி.

**"கட்டளை இட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்."**
**– அரிஸ்ராட்டில்.**



# ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவம்

*திருமதி விஜிதா பிரதாபன்* (*B.A. Dip. in. Eud*)
*ஆசிரியை - யா/ ஸ்கந்தவரரோதயா ஆரம்ப பாடசாலை*

இன்றைய உலகில் ஒவ்வொரு கணமும் மாறிவரும் வளர்ந்து வரும் தொழில் நுட்பப் பெருக்கமானது மனிதனை வாழ்வில் எதிர் நீச்சல் போட்டாலே வாழ முடியும் என்ற நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதற்கு ஈடுகொடுக்க வேண்டுமாயின் பல்வேறுபட்ட விடயங்களையும் சமகால நிகழ்வுகளையும் உள்வாங்கும் திறன் கொண்டவராக ஒவ்வொருவரும் இருத்தல் அவசியமாகின்றது. இது பல்துறை விடயங்களையும் அவ்வப்போது வாசிப்பதன் மூலமாகத் தான் சாத்தியமடைகின்றது. அந்த வகையில் சிறுவர்கள் எனப்படும் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் சவால்களை எதிர்கொண்டு மிளிரும் ஒரு சமுதாயத்தை உருவாக்கத்தயாராவது எனின் அதனை நூலகப் பயன்பாட்டின் ஊடாகவே சாதிக்க முடியும்.

“ஒரு பாடசாலையின் முழுமையான கல்வித்திட்டத்தோடு ஒருமித்து ஆதரவளிக்கும் ஓர் அங்கமாக பாடசாலையின் நூலகம் இயங்கும் போது அது கல்வித்துறையில் மிக உயர்ந்த நிலையை எய்த உதவும் ஒரு சத்தியாகப் பரிண மிக்கின்றது” என்கிறார் ரூத்ஆண்டேவிஸ்.

“வாழ்க்கையை நேசிப்பவர்கள் புத்தகங்களை நேசிப்பார்கள் புத்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக் கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது” என்பார் சிந்தனையாளர் பிளேட்டோ. மனிதனை முழுமையடையச் செய்து சரியான பாதைக்கு திரும்ப வைப்பதும் மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைப்பதும் புத்தகங்களே. படிக்கும் போது புதிய புதிய சிந்தனைகளைத் தரக்கூடிய ஆற்றல் புத்தகங்களிற்கு உண்டு. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பதிற்கிணங்க இளமைப்பருவத்திலே கற்பது

வாசிப்பது முதுமை வரை அழியாது மனதில் நன்றாகப் பதிவதுடன் மாணவர்களிடத்தே கிரகிக்கும் சிந்திக்கும் திறன்களை அதிகரிக்கும் என்பது நவீன ஆய்வுகளின் கருத்தாகும். அந்த வகையில் மாணவர் ஒருவர் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான கல்வியைப் பெறும் வழியை பாடசாலை மட்டத்திலே அறிந்து கொள்ள ஆரம்பக் கல்வி மாணவர் இடத்திலே நூலகப் பயன்பாட்டை விருத்தி செய்து கொள்வது அவசியமானதாகும்.

அறிவுத்தேட்டம் ஒருவரின் வாழ்க்கை முழுவதிலும் நிகழ்வதாகும். எனவே அத்தகையதொரு துறைக்கான பழக்கத்தைப் பிள்ளைகள் பாடசாலைகளில் தான் பெறுகிறார்கள். எனவே தான் பாடசாலை நூலகங்கள் கல்வித் துறையில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. ஆரம்பக் கல்வி மாணவர்களின் அடிப்படை மொழித்திறன் விருத்திகளில் வாசிப்பு என்பது முக்கியமான தொன்றாகும். வாசிப்பினூடாகவே மாணவர்களது எழுத்தாற்றல் விருத்தி செய்யப்படுகின்றது. உலக நடைமுறைகளைப் புரிந்து கொள்ளவும் செய்திகளை அறியவும் வாசிப்பு கட்டாய தேவையாகும். அதனை எல்லாம் நூலகப் பயன்பாட்டினூடாகவே வளர்த்தெடுக்க முடியும்.

பொதுவாக நூலகங்கள் நூல்களை வாசிப்பதில் ஆர்வமும், திறமையுமுள்ளவர்களுக்காகவே பணியாற்றுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. பாடசாலை நூலகங்களோ ஆர்வமும், திறமையும் உடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல், வாசிப்பதில் இடர்பாடும் ஆற்றல் குறைவான, மெல்லக் கற்கும் பிள்ளைகளுக்கும் சிறப்பாக உதவக் கூடியதாகச் செயற்படுகின்றன.

மாணவர்களிடத்தே நூலகப் பயன்பாட்டுப் பழக்கத்தை ஏற்படுத்தல், அகலவாசித்தல், ஆழவாசித்தல் என்பவற்றில் ஆர்வத்தை ஊட்டுதல் என்பவற்றுடன் பயன்மிக்க பொழுதுபோக்காக வாசிப்பைத் தூண்டுதல் என்பவற்றிலும் பாடசாலை நூலகம் துணை புரிகின்றன. இவை தவிர சுயவிருப்புக்கு சுதந்திரமளித்து வாசிப்பு பழக்கத்தை

ஊக்குவிக்கும் அடித்தளமாகவும் சுயமாகக் கற்றுக் கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்வதாகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பாற் சென்று பொதுவான விடயங்களைத் தேடும் களமாகவும் விளங்குவதால் பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டல்களை மாணவர்களுக்கு வழங்குவது சிறந்ததாகும்.

தற்காலத்தில் நூலகங்களின் பாவனையை கணினி, தொலைக்காட்சி போன்ற நவீன ஊடகங்கள் ஆக்கிரமித்து கொண்டுள்ளமையால் மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. முன்னர் எல்லாம் மாணவர்களால் நிரம்பி வழிந்த நூலகங்கள் இன்று வெறிச்சோடிப் போய்க் கிடக்கின்றன.இன்று நூலகங்களில் பெரும்பாலும் ஒரு வயோதிப சமுதாயத்தையே காணமுடிகின்றது. இதிலிருந்து இன்று நமது மாணவ சமுதாயத்துக்கு வாசிக்க வேண்டிய தேவை குறைந்து விட்டது என்பதே உண்மை. பத்திரிகையைக் கூட வாசிக்க நேரம் இல்லாத மாணவ சமுதாயம் தற்போது வளர்ந்து வருகின்றது. பத்திரிகை வாசிக்கும் சிலரும் தமக்கு சுவாரசியமான தகவல்களைத் தேடுகிறார்களே தவிர கல்வித்தேடலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அது மட்டுமன்றி பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் தமது பாடத்திற்குரிய தகவல்கள் முழுவதையும் தாமே கொடுத்து விடுகிறார்கள். மாணவர்களுக்குத் தேடலுக்குச் சந்தர்ப்பம் அளிப்பது குறைவாகக் காணப்படுகின்றது. அவ்வாறு இன்றி சில விடயங் களைக் கொடுத்து மாணவர்களைத் தேடி அறிய விடுதல் வேண்டும். அப்போது தான் மாணவர்களுக்கு வாசிக்கும் சந்தர்ப்பம் அதிகரிக்கும். அத்துடன் ஒரு விடயம் பற்றித் தேடிப் போகும் போது பல விடயங்களை அறிய மாணவர்கள் தூண்டப்படுவார்கள். ஆரம்பக்கல்வி மாணவர்களில் அதிலும் குறிப்பாக முதன்மைநிலை மூன்றில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தேசிய ரீதியில் நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு முகம்கொடுப்பவர்களாகக் காணப்படு கின்றார்கள். அவர்களுக்குப் பல்வேறு துறைகளிலும் அமைந்த சமகால அறிவு தேவைப்படுகின்றது. இதனைப் பாடசாலை நூலகங்கள் ஊடாக வாசித்துக் கிரகித்து மனதில் பதியச் செய்ய ஆசிரியர்கள் துணை

புரிய வேண்டும். இவ்வாறாக அவர்கள் தாமே தேடி அறிந்து கற்கும் கல்வியானது அவர்கள் மனதில் அழியாது நிலைத்து நிற்கும். ஆரம்பக் கல்வியில் கற்கும் அறிவானது பின்னர் உயர் தர வகுப்புக்களில் பொது அறிவுப் பாடத்தில் சித்தியடைய உதவுகின்றது. இன்று பொது அறிவுப் பாடத்தில் கூட சித்தியடையாத மாணவர்கள் உயர்தரத்தில் காணப்படு கின்றார்கள். அந்த நிலை மாறுவதற்கு மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி பயிலும் காலத்திலிருந்தே பாடசாலைகளில் நூலகப் பயன்பாட்டை ஊக்குவித்து வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்ததொரு அறிவு விருத்தி பெற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"**

"அதிகமாகப் பேசினால் அமைதியை இழக்கிறாய்,
ஆணவமாகப் பேசினால் அன்பை இழக்கிறாய்,
வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்,
கோவமாகப் பேசினால் குணத்தை இழப்பாய்,
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய்,
வெகுநேரம் பேசினால் பெயரை இழப்பாய்,
பெருமையாகப் பேசினால் ஆண்டவன் அன்பை இழப்பாய்"
– சுவாமி விவேகானந்தர்.

"எது நடந்தாலும் என்ன தான் தோல்வி வந்தாலும் நான் அஞ்சப்போவதில்லை.
ஏனெனில் நான் நூறு வெற்றிகளைப் பெற்றவன் அல்ல.
நான் ஆயிரம் தோல்விகளைச் சந்தித்தவன்.
– தோமஸ் அல்வா எடிசன்.

"பிரார்த்தனையை விட மிக உயர்ந்தது பொறுமை"
– கௌதம புத்தர்.



# கல்விக்கு வறுமைதடையாகுமா?

நான் நடுத்தரமான ஒரு குடும்பத்திற் பிறந்து சாதாரண பள்ளி மாணவனாக இருந்தேன். அப்போது எனக்கு புத்தகங்கள் எட்டாக்கனி. இன்னொருவர் வீட்டிலிருந்து இரவல் வாங்கிப் படித்தேன். எனது ஊரிலே புகைவண்டி நிறுத்தப்படுவதில்லை. எனவே புகைவண்டி ஓடிக் கொண்டிருக்கும் போதே யன்னலூடாகத் தினசரிப் பத்திரிகைப் பொதிகளை வீசுவார்கள். அவற்றை ஓடி ஓடி எடுத்து விற்பனை முகவரிடம் கொடுப்பேன். இது தான் எனது முதற் சம்பாத்தியம். புளியங்கொட்டைகளைச் சேகரித்து ஒரு மளிகைக் கடையில் விற்பேன்.

இவ்வாறாக தனது இளமைக்காலத்தை கூறுகின்றவர் தான் 2003 ஆம் ஆண்டின் இந்தியாவின் 11வது ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பெற்ற அப்துல்கலாம். ஒரு நாள் கடற்கரையில் குழந்தைகள் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் சுருட்டைத் தலைமுடியும், கனவு சுமந்த கண்களுடன் ஒரு சிறுவன் இருந்தான். அந்தச் சிறுவன் தான் பின்னாளில் பதினொராவது இந்தியக் குடியரசுத் தலைவராய்ப் பொறுப்பேற்ற அவுல் பக்கீர் ஜைனுல்லாபுதீன் அப்துல்கலாம் ஆவார். அப்துல் அவனுடைய தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தாலும் கவனம் முழுவதும் மேலே பறந்து கொண்டிருந்த பறவைகளின் ஒலியிலேயே இலயித்திருந்தது. புதிதாகச் சிறகு முளைத்த பறவைக்குஞ்சு ஒன்று படகுக் கம்பி மீது உட்கார்ந்து இருந்தது. அப்போது அதுமேலே பறப்பதற்கு முயன்று கொண்டிருந்தது. அந்த அரிய காட்சியைக் கலாம் கூர்ந்து கவனித்தான். பறவை தன் சிறகுகளை விரித்து மெல்லப் படபடவென்று அடித்துக் கொண்டது. அவ்வளவு தான் அது மேலே எழும்பி விட்டது. அது மேலே பறந்து செல்லத் தேவையான உந்து விசையைக் காற்றுத் தந்திருக்க வேண்டும். அந்தப் பறவை உயரப் பறந்து வானத்தில் வட்டமிட ஆரம்பித்தது. திசையறிந்து வேகமெடுத்து மிகச் சுலபமாகச் சென்று கொண்டிருந்தது. அந்தப் பறவைகளைப் போல் காற்றில் பறந்து விண்ணில் வலம் வர வேண்டும் என்ற ஆவல் அப்துல் மனதில் ஆழப் பதிந்தது. வண்ணப் பறவைகளால் தூண்டிவிடப்பட்டு பறக்க வேண்டும் என்கிற தணியாத மோகம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவின் முதல் ரொக்கட்டை வடிவமைத்து அதன் மூலம் 1980 ஜுலை 18 அன்று ரோஹினி எனும் செயற்கைக் கோளை வெற்றிகரமாகக் கோள் வீதியில் செலுத்த

அப்துல்கலாமிற்கு உத்வேகமாய் அமைந்தது. அது எஸ்.எல்.வி 3ஜசேட்லைட் லாஞ்ச் வெஹிள்) என்றழைக்கப்பட்டது. அன்று அப்துலின் வளர்ச்சிப் பருவத்தில் இத்தகைய ஒரு நிகழ்வு நிகழும் என்பதை யாரும் கனவு கண்டிருக்க முடியாது.

அப்துலின் தந்தை ஜைனுல்லாபுதின் தெய்வ பக்தி மிக்கவர் அவர் தன் குடும்பத்தினருக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் குறை வில்லாமல் பூர்த்தி செய்து ஆடம்பரமில்லாத வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அப்திலுடைய தந்தையார் அதிகாலையிலேயே எழுந்து தொழுகைக்குச் சென்று விடுவாராம். அப்துல் வீட்டிற்கு அருகிலேயே ஒரு பழமையான மசூதி இருந்தது. அங்குதான் அவனுடைய குடும்பத்தினர் தொழுகையை நடத்தினர்.

எப்போதும் வெவ்வேறு மதத்தினைச் சேர்ந்தவர்கள் ஆசி பெறுவதற்கு அவரை நாடி வருவார்கள் அவர்கள் வரும் போது சின்னப் பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டு வருவார்கள். அவர்கள் அதில் விரல் நுனியை வைத்து பிரார்த்தனை செய்வார்கள். அதை அவர்கள் தங்களுடைய வீட்டிற்கு எடுத்துச் சென்று நோய் வாய்ப்பட்டிருப்பவர்களுக்கு மருந்தாகக் கொடுப்பார்கள். நோய் குணமடைந்ததும் அவர்கள் வீடு தேடி வந்து அப்துலுடைய தந்தைக்கு நன்றி கூறி விட்டுச் செல்வார்கள். சில சமயங்களில் அவர்கள் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இனிப்புக்களையும் கொண்டு வருவதுண்டு பாசத்தால் பின்னிப் பிணைக்கப்பட்ட இந்தக் குடும்பத்தில் சாப்பாட்டு வேளை என்பது எப்போதுமே முக்கியத்துவம் வாய்ந்தது. அப்போது தான் குடும்ப விவகாரங்களிலிருந்து ஆன்மிக விடயங்கள் வரை பலவித கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அப்துல் தன் தந்தையிடம் "பிரார்த்தனை செய்வதால் என்ன பயன்" என்று கேட்டார்.

உடனே அவருடைய தந்தை ஒருவன் பிரார்த்தனை செய்யும் போது தன் உடலைக் கடந்து போய் இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கமாய் மாறிவிடுகிறான். அந்த நிலையில் பணம், வயது, சாதி அல்லது இனம் எந்த வேறுபாடும் தெரிவதில்லை என்று கூறினார். அந்தப் பதிலில் வெளிப்பட்ட வார்த்தைகள் அப்துல் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விட்டன.

தமிழ் நாட்டின் தென் எல்லையிலுள்ள இராமேஸ்வரத்தில் தனுஷ்கோடியில் 1931 ஆம் ஆண்டில் பிறந்த இவரது தந்தையான அவுல் பக்கீர் ஜைனுல்லாபுதின் ஒரு படகோட்டி. படகொன்றைத் தானே செய்து

பயணிகள் சேவையை நடத்தி வந்தார். பக்தர்களைக் கரை சேர்க்கப் படகுப் போக்குவரத்து செய்து வந்ததில் நல்ல வருமானம் கிடைத்தது. குடும்பத்தின் வாழ்க்கைப் படகும் வசதியாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் அடித்த சூறாவளிப் புயற்காற்றில் இராமேஸ்வரத்தின் கரைகள் அடித்துச் செல்லப்பட்டன கூடவே அவர்களது படகும் சின்னா பின்னமாகியது. ஒரு நொடியில் நடந்து முடிந்த சோக நாடகத்தில் குடும்பத்திற்கு இருந்த ஒரே வருமான ஆதாரம் இனி இல்லை என்றானது. நெருக்கடியில் குடும்பம் தவித்துக் கொண்டது. சிறுவன் அப்துல் குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்று விரும்பினான். அப்போது அவன் சந்தையில் புளியங்கொட்டைக்கு அபரிமித கிராக்கி உள்ளது என்பதை உணர்ந்தான். புளியங்கொட்டைகளைச் சேகரித்து அவற்றை வீட்டிற்கு அருகில் இருந்த கடையில் விற்பது என முடிவு செய்தான். அவனுடைய குடும்பம் அவன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்பியது. அவன் படித்துக் கொண்டே குடும்பத்திற்கு உதவுவதாகக் கூறினான். விருப்பம் இல்லாமலே குடும்பத்தினர் அந்த முடிவை ஏற்றுக் கொண்டனர். படித்துக் கொண்டிருக்கும் போது அல்லது மாலை வேளைகளில் கடற்கரை மணலில் ஆனந்தக் களிப்பில் இருந்த போது கூட புளியங்கொட்டைகளைச் சேகரித்து அவற்றை அருகில் உள்ள கடையில் கொண்டு போய் விற்று வரவும் சிறிது நேரத்தை ஒதுக்கத் தவறவில்லை.

அதற்கு அவனுக்குக் கிடைத்த விலை ஒரு அணா. புளியங் கொட்டைகளை விற்று வந்ததோடு மட்டுமன்றி தனது ஒன்று விட்ட சகோதரன் சம்சுதீனுக்கு பிரபலமான தமிழ் நாளேடான தினமணியை விற்றுக் கொடுத்து உதவுவதன் மூலம் அவனுக்குக் கூடுதல் வருமானமும் கிடைத்தது.

ஓடும் புகையிரதத்தில் இருந்து இராமேஸ்வர புகையிரத நிலைய நடை மேடை மீது சென்னையில் அச்சிடப்பட்ட நாளேடுகளைக் கட்டுக் கட்டாகத் தூக்கி எறிவார்கள். இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த அந்த கால கட்டத்தில் புகையிரதம் இராமேஸ்வரம் புகையிரத நிலையத்தில் நிற்காது. பெரும்பாலும் அவை படைகளின் போக்குவரத்திற்கே பயன்படுத்தப்பட்டன. அப்துல் அந்தப் பகுதிக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டுகளைச் சேகரித்து அவற்றைச் சம்சுதீனிடம் ஒப்படைக்க ஓடுவார். கலாம் செய்த சேவைக்கு என்று சம்சுதீன் ஒரு சிறு தொகையைத் தருவார். அக்காலத்தில் தினமணி பத்திரிகைக்கு ஏக கிராக்கி இருந்தது.

இந்தியச் சுதந்திரப் போராட்டம் மற்றும் போரின் நிலவரம் பற்றி தெரிந்து கொள்வதற்காகவே மக்கள் பத்திரிகையை வாங்கினார்கள். இப்படித்தான் அப்துல் தனது முதல் சம்பாத்தியத்தைப் பெற்றான். குடும்பம் பராமரிக்கப்படுவதில் தன்னால் உதவ முடிகிறதே என்று எண்ணி அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது, மற்றவர்களும் அப்துலைப் பாராட்டினார்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகும் தான் சுயமாக வருவாய் ஈட்டிய நாட்களை எண்ணிப் பார்க்கும்போது அதனால் உண்டான விளைவுகளையும் அசை போட்டுப் பார்க்கும் போது ஒரு வித பெருமிதம் ஏற்படுவதாக அவர் இப்போதும் நினைவு கூருகிறார்.

கையிற் கிடைத்த பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வாசித்துக் கல்வியில் முன்னேற வேண்டுமென்ற அப்துல் கலாமின் விருப்பம் வீண் போகவில்லை. தனது விருப்பத்தை தந்தையாரிடம் கூறிய போது அவர் தடையாகவிருக்காது இராமேஸ்வரம் உயர் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். தனது 27 ஆவது வயதிலே கலாம் விமானப் பொறியிற் படிப்பை முடித்தார். உழைப்பு உழைப்பு கடின உழைப்பு அதன் விளைவு தான் என்ன? உயர்ந்தார். உலகம் போற்றும் விஞ்ஞானியானார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் சேர்ந்து இந்தியாவின் முதலாவது செயற்கைக் கோள் திட்டத்தின் இயக்குநராக விளங்கினார். அக்கினி, பிருதுவி, ஆகாஸ் முதலான ஏவுகணைகளைச் செலுத்துவதற்கு காரணமாகினார். இதனால் இந்தியாவின் ஏவுகணை மனிதர் எனப் பெயர் பெற்றார். உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 1998 இல் நடந்த இந்தியாவின் பொக்ரான் அணுகுண்டுப் பரிசோதனையின் நாயகரும் இவரேயாவார். இந்தியா தனது முதன்மை விஞ்ஞானிகளில் ஒருவரான இவரை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்து கௌரவித்து சுமார் 30 பல்கலைக்கழகங்கள் வரை இவருக்கு டாக்டர் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன. இந்தியாவின் உயர் விருதுகளான பத்மபூசன், பத்ம விபூசன், பாரத ரத்னா விருதுகளையும் பெற்றார். கல்விக்கு வறுமை தடையாகாது என்பதை உலகிற்கு உணர்த்திய ஒரு மாமனிதர் அப்துல்கலாம்.

*ம. ஹேமாதங்கி (பழைய மாணவி)*
*யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*



# அம்மா

ஒரு அழகான கிராமத்தின் மாலை வேளையிலே வயல்களில் வேலை செய்து களைத்த உழவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

தன் அம்மாவுடன் நடந்து சென்ற ஒரு சுட்டிப்பையன் பட்டாம் பூச்சிகளைக் கண்டு அவற்றின் பின்னால் ஓடினான். தன் தாயை விட்டு வெகு தூரம் வந்து விட்டதை அப்போது தான் சிறுவன் உணர்ந்தான். யாருமே இல்லாத அப்பகுதியில் சிறுவனின் அழுகுரல் மட்டுமே எங்கும் ஒலித்தது.

"ஐயோ வழி தெரியாமல் வந்து விட்டேனே...." அம்மா... அம்மா.... எங்கம்மாகிட்ட யாராச்சும் கொண்டுபோய் விடுங்களன்! எனக் கதறி அழுதான்.

அப்போது அவ்வழியே வந்த உழவன் சிறுவனின் அழுகுரல் கேட்டு அவனிடம் சென்றார்.

"நீ யாரு எதற்காக தனியா நிற்கிற?"

நான் பட்டாம் பூச்சி பிடிக்க ஓடி வந்து அம்மாவைத் தொலைச்சிட்டேன்... அவங்க வயல்ல வேலை செஞ்சிட்டு வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்காங்க... எனக்குத் திரும்பிப் போக வழி தெரியல்ல எனச் சிறுவன் கூறவே, அவனைச் சமாதானப் படுத்திய உழவன் "சரி பயப்படாதே.. நான் உங்க அம்மாகிட்ட கூட்டிக்கிட்டுப்போறன்! உங்கம்மா எப்படி இருப்பாங்கன்னு சொல்லிறியா?" எனக் கேட்டார்.

அதற்கு எங்கம்மா றொம்ப அழகாயிருப்பாங்க, இந்த ஊரிலையே அவங்க தான் அழகு! எனப் பெருமையுடன் பதிலளித்தான் சிறுவன்.

சிறுவனை அழைத்துக் கொண்டு ஊரை நோக்கிச் சென்ற உழவன் எதிரில் மிகவும் அழகான ஒரு பெண் நடந்து வருவதைக் கண்டான். உடனே தம்பி இவங்க றொம்ப அழகாக இருக்காங்க இவங்க தானா உன் அம்மா, எனக் கேட்க தன் அம்மா இன்னும் அழகாக இருப்பாள் என சிறுவன் பதிலளித்தான்.

வழியில் இரண்டு அழகான பெண்கள் தண்ணீர் சுமந்து செல்வதை உழவர் கண்டார். கண்டிப்பாக இவர்கள் இரண்டு பேரில் ஒருவர் தான் சிறுவ னின் அம்மாவாக இருக்க வேண்டும் என்று நம்பிய உழவன் சிறுவனிடம் கேட்டார்.

ஆனால் "இல்ல... எங்கம்மா இவங்க எல்லாரையும் விட அழகாக இருப்பாங்க! என்று உறுதியாகக் கூறினான்.

அப்போது எதிரில் பதற்றத்துடனும் கண்ணீருடனும் ஒரு பெண் ஓடி வருவதைப் பார்த்த சிறுவன் "அதோ என் அம்மா! அது தான் என் அம்மா! என் அம்மா கிடைத்து விட்டாள்! என சந்தோசமாக கூக்குரலிட்டான்.

கறுப்பாகவும்? ஒரு கண்ணில் பார்வையில்லாமலும் காட்சியளித்த அந்தப் பெண்ணை பார்த்த உழவன் ...

அந்த ஊரே அதிரும்படி சிரித்தான். "இதுவா உங்க அம்மா... இவங்களையா அழகுன்னு சொன்ன? என்று சிறுவனைப் பார்த்துக் கேட்டான்.

அதற்குச் சிறுவன் மிகவும் பொறுமையாக "ஆமா.. அவங்க என்ன ரொம்ப பாசமாக பாத்துக்குவாங்க.. எல்லார்கிட்டையும் அன்பா நடந்துக்கிற பின்னாளில் திறன்களை அறிந்து கொள்வதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் இவங்கதான் உலகத்திலேயே அழகானவங்க! என்று பதிலளித்தான். தன் தாயின் கையைப் பிடித்துத் துள்ளிக் குதித்து நடந்தான்.

உண்மையான அழகு எது என்பதை உணர்ந்து கொண்ட உழவன், முகம் இருண்டு போய் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

**பா. சானுஜா (பழைய மாணவி)**
**தரம்: 08**
**யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**



## தரம் 05 புலமைப் பரிசில் வினாத்தாள்களில் பத்து வருடமாக இடம் பெற்ற ஆங்கிலப் பதங்களும் அவற்றிற்குரிய தமிழ்ப் பதங்களும்.

### ஆண்டு 2013

| ஆங்கிலம் | தமிழ் |
| --- | --- |
| Don't shout please. | தயவு செய்து சத்தமிட வேண்டாம் |
| I want to watch a match. | நான் ஆட்டமொன்றைப் பார்க்க வேண்டும் |
| Shall we go to the play ground? | நாம் விளையாட்டு மைதானத்திற்கு செல்வோமா? |
| Chalk | வெண்கட்டி |
| Doctor | வைத்தியர் |

### ஆண்டு 2012

| ஆங்கிலம் | தமிழ் |
| --- | --- |
| What are these ? | இவைகள் என்ன? |
| Can you help me? | நீங்கள் எனக்கு உதவுவீர்களா? |
| Please open the door. | தயவு செய்து கதவைத் திற. |
| Horse | குதிரை |
| Pencil | பென்சில் |

### ஆண்டு 2011

| ஆங்கிலம் | தமிழ் |
| --- | --- |
| Shall we pluck flowers ? | நாங்கள் பூக்களைப் பறிப்போமா? |
| May I come in? | நான் உள்ளே வரலாமா? |
| I will come tomorrow. | நான் நாளை வருவேன் |
| Please clean the class room. | தயவு செய்து வகுப்பறையைத் துப்பரவாக்குங்கள் |
| Elephant | யானை |
| Umbrella | குடை |

### ஆண்டு 2010

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Black board | கரும்பலகை |
| Pine apple | அன்னாசி |
| I love my country. | நான் எனது நாட்டை விரும்புகின்றேன். |
| Who is shouting? | யார் சத்தம் போடுவது? |
| Silence please. | தயவு செய்து சத்தம் போட வேண்டாம். |
| Let's sing a song. | நாங்கள் பாட்டு ஒன்று பாடுவோம். |

### ஆண்டு 2009

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Morning | காலை |
| Evening | மாலை |
| Night | இரவு |
| Be careful. | கவனமாக இரு. |
| What is this? | இது என்ன? |
| I am drinking water. | நான் நீர் அருந்துகிறேன். |

### ஆண்டு 2008

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Rabbit | முயல் |
| Night | இரவு |
| Please give me your pen. | தயவு செய்து உங்கள் பேனையை எனக்குத் தாருங்கள் |
| I am bringing flower. | நான் பூக்கள் கொண்டு வருகிறேன். |

### ஆண்டு 2007

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| parrot | கிளி |
| I am hungry. | எனக்குப் பசிக்கிறது. |
| What is your name ? | உங்களுடைய பெயர் என்ன? |

### ஆண்டு 2006

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Nose | மூக்கு |
| Ear | காது |
| Good morning. | காலை வணக்கம். |
| Please come here. | தயவு செய்து இங்கே வாருங்கள். |
| What is this? | இது என்ன? |

### ஆண்டு 2005

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Sunday | ஞாயிற்றுக் கிழமை |
| Black | கறுப்பு |
| Friend | நண்பன் |
| Happy new year | இனிய புதுவருட வாழ்த்துக்கள். |
| Please be silent. | தயவு செய்து அமைதியாக இருங்கள். |
| Let us go home. | நாங்கள் வீட்டிற்குப் போவோம். |

### ஆண்டு 2004

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Birds | பறவைகள் |
| Nose | மூக்கு |
| Nine | ஒன்பது |
| Please sit. | தயவு செய்து இருங்கள். |
| Come here. | இங்கே வாருங்கள். |
| Throw the ball. | பந்தை எறியுங்கள். |

*சி. ஐதுசாஜினி*
*5A*

எல்லோரையும் நம்புவது அபாயகரமானது,
ஒருவரையும் நம்பாது இருப்பது இன்னும் அபாயகரமானது.
– ஆபிரகாம் இலிங்கன்.



# ஒலிம்பிக் விளையாட்டு

ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும். அந்நாட்டில் "ஒலிம்பஸ்" என்னும் மலை உள்ளது. அதனருகே "ஒலிம்பியா" என்ற இடம் உண்டு. அவ்விடத்தில் கிரேக்கர்களின் வீரக்கடவுளான "சீயஸ்" ஆலயம் இருந்தது. அக்கடவுளை வழிபடும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. கிரேக்கர்களின் வழிபாட்டு இடமான ஒலிம்பியாவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதால் அப்போட்டிகளுக்கு ஒலிம்பிக் போட்டிகள் என்ற பெயர் உண்டாகியது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896 ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகின. நவீன ஒலிம்பிக் போட்டிகளைத் தோற்று வித்தவர் பிரான்ஸ் நாட்டின் பிரபு பியஸ் டி. குபேற்றின் ஆவார். ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன. முதலாம், இரண்டாம் உலகப் போர்களினால் ஒலிம்பிக் போட்டிகள் மூன்று முறை நடைபெறவில்லை. ஒலிம்பிக் போட்டிகளின் குறிக்கோள் "விரைக, உயர்க, வலிமை பெறுக" என்பதாகும். போட்டிகளில் வெற்றி பெறுவது என்பதை விடக் கலந்து கொள்வதே சிறப்பாகும். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் நடைபெறுகின்றன. ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பநாளில் போட்டியாளர்களின் அணி வகுப்பு நடைபெறும். ஒலிம்பிக் கொடி பறக்க விடப்படும். ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். விளையாட்டு வீரர்களினால் உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்படும்.

ஒலிம்பிக் கொடி வெள்ளை நிறத் துணியால் ஆனது. அக்கொடியில் கறுப்பு, நீலம், மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களினால் ஆன ஐந்து வளையங்கள் காணப்படுகின்றன. இந்த ஐந்து நிறங்களில் ஒரு நிறமாவது ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் நாடுகளின் கொடிகளில் காணப்படும். பழங்கால ஒலிம்பிக் விளையாட்டிற்கும் தற்கால ஒலிம்பிக் விளையாட்டிற்கும் இடையேயான தொடர்பை ஒலிம்பிக் தீபம் உணர்த்துகின்றது. ஒலிம்பிக் ஜோதியை உருவாக்கும் தீப்பந்தம் கிரீஸ் நாட்டில் உள்ள ஒலிம்பியாவில் சூரியக் கதிர்களால் பற்றவைக்கப்பட்டு

ஒலிம்பிக் நடைபெறும் நாட்டிற்குப்பல தொடர் ஓட்டக்காரர்களால் கொண்டு வரப்படுகின்றது. தேவையேற்படின் கப்பல்களும், ஆகாய விமானங்களும் பயன்படுத்தப்படும். இலங்கைக்கு ஒரு பதக்கத்தை முதன் முதல் பெற்றுக் கொடுத்தவர் டங்கன் வைட் ஆவர். இவர் 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டார். 400m தடை தாண்டும் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை அவர் சுவீகரித்துக் கொண்டார். 52 வருடங்களின் பின்னர் சுசந்திகா ஜெயசிங்க என்ற வீராங்கனை இலங்கைக்கு ஒரு வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார். அவர் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றினார். 200மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாவது இடத்தைப் பெற்ற வீராங்கனை ஒருவர் இலங்கைக்காக ஒலிம்பிக் பதக்கம் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

*தி. விதுஜா*
*4B*

**"துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு,**
**ஆனால் அது எனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே."**
**– பெஞ்சமின் பிராங்ளின்.**

**"சிறிய தவறுகளைத் திருத்திக்கொள்ள முயலாவிட்டால்**
**பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது."**
**– கண்ஃபுஷியஸ்.**

**"ஒவ்வொருவரும் உலகத்தை மாற்றமுற்படுகின்றார்களே தவிர**
**தம்மை மாற்றிக்கொள்ள முயலுவதில்லை."**
**– லியோ டால்ஸ்டாய்.**

**"நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது,**
**நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது,**
**துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.**
**– கண்ஃபுஷியஸ்.**



# திருஞான சம்பந்தர்

- சோழவள நாட்டிலே சீர்காழி என்னும் ஊரிலே பிறந்தார்.
- தந்தையின் பெயர் சிவபாதவிருதயர்.
- தாயின் பெயர் பகவதியார்.

- இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆளுடைய பிள்ளையார்.
- அவர் மூன்று வயதிலே ஞானப்பால் உண்டார்.
- அதனால் திருஞான சம்பந்தர் என்னும் பெயரைப் பெற்றார்
- மூன்று வயதிலே தோடுடைய செவியன் எனும் தேவாரத்தைப் பாடினார்
- சமய குரவர்களில் முதற்குரவராகப் போற்றப்படுகிறார்.
- முதன் மூன்று திருமுறைகளையும் இவரே பாடியுள்ளார்.
- தேவார முதலி எனவும் சிறப்பிக்கப்படுகின்றார்.
- சைவ சமயத்தின் உண்மையை நிலை நாட்டியவர்.
- இறையருளால் பல அற்புதங்கள் செய்தார்.
- இவர் செய்த அற்புதங்களாவன பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக் குடை என்பவற்றைப் பெற்றார்.
- முயலகன் நோயை நீக்கினார்
- பாண்டியனின் வெப்பு நோயைப் போக்கினார்
- பாம்பு தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தார்.
- படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கினார்
- திருமறைக் காட்டிலே திருக்கதவு மூடப் பாடினார்.
- பூம்பாவையை உயிர்ப்பித்தார்
- சைவ சிகாமணி முத்தமிழ் விரகர் என அழைக்கப்படுகின்றார்
- பதினாறு வயதிலே இவருக்குத் திருமணம் நடைபெற்றது
- திருமண நாளன்று இறைவனுடன் சுற்றம் சூழ சோதியிற் கலந்தார்
- அன்றைய தினம் வைகாசி மூலம் ஆகும்.

*ஜே. சுவேதினி*
*4B*



# பூக்கள்



வண்ண வண்ணப் பூக்களாம்
வாசம் வீசும் பூக்களாம்
கண்ணைக் கவரும் பூக்களாம்
காலையில் மலரும் பூக்களாம்

பார்க்க அழகுப் பூக்களாம்
பறித்து நாமும் மகிழுவோம்
வண்டு வந்து மெல்ல
வட்டமிடும் பூக்களாம்

சின்னச் சின்னப் பூக்களாம்
சிவப்பு வெள்ளைப் பூக்களாம்
கொத்துக் கொத்தாய் மலர்ந்து
கொள்ளை கொள்ளும் பூக்களாம்

மனதை மயக்கும் பூக்களாம்
மதுரம் நிறைந்த பூக்களாம்
செடியில் மலரும் பூக்களாம்
செழித்து நின்றே சிரிக்குமாம்

மலர்ந்த பயனை எய்தவே
மனம் துடிக்கும் பூக்களாம்
இறைவன் பாதம் சேர்ந்து
இனிமை காணும் பூக்களா



*அ. சுதேசிகா*
*3B*



# இலங்கை பற்றிய விடயங்கள் சில...

1. இலங்கையில் உள்ள இனங்களும் அவர்கள் பேசும் மொழிகளும் :
   1. சிங்களவர் - சிங்களம்
   2. தமிழர் - தமிழ்
   3. இஸ்லாமியர் - தமிழ், சிங்களம்
   4. பறங்கியர் - ஆங்கிலம்
2. இலங்கை மக்கள் பின்பற்றும் பிரதான சமயங்கள் :
   பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறிஸ்தவம்
3. அவர்கள் அணியும் ஆடைகள் :
   1. சிங்களவர் - ஆண்கள் சாரமும் சேட்டும், பெண்கள் லுங்கி மேற்சட்டை
   2. தமிழர் - ஆண்கள் வேட்டி, சால்வை, பெண்கள் சேலை, ரவுக்கை
   3. இஸ்லாமியர் - ஆண்கள் ஜிப்பா, பெண்கள் அபாயா, பர்தா
   4. பறங்கியர் - ஆண்கள் நீளக் காற்சட்டை, சேர்ட், பெண்கள் கவுண்
4. இலங்கை மக்களின் கலாச்சார உணவு
   1. சிங்களவர் - கொக்கீஸ்,கொண்டகவுண்,கலூவா,களுதொதல், அஸ்மீஅக்கலா
   2. இஸ்லாமியர் - தொதல், வட்டிலப்பம், பளூடா, சமுசா
   3. தமிழர் - சக்கரைச் சாதம்,தொதல்,முறுக்கு,லட்டு,சோகி,பலகாரம்
   4. பறங்கியர் - கேக்
5. இலங்கை மக்கள் கொண்டாடும் பண்டிகைகள் -
   1. சிங்களவர் - சித்திரைப் புதுவருடம், வெசாக் பண்டிகை
   2. தமிழர் - தைப்பொங்கல், தீபாவளி, சித்திரைப் புதுவருடம்
   3. இஸ்லாமியர் - ஹஜ் பெருநாள், நோன்பு பெருநாள், முகமது நபிகள் பிறந்த நாள்
   4. பறங்கியர் - ஈஸ்டர், நத்தார், ஆங்கிலப் புத்தாண்டு
6. இலங்கை மக்களின் நடனக் கலைகள்
   1. சிங்களவர் - கண்டிய நடனம்
   2. தமிழர் - பரத நாட்டியம்
   3. இஸ்லாமியர்- கோலாட்டம்
   4. பறங்கியர் - கப்பறிஞ்ஞா

*த. தக்ஷா*
*3A*





















# பழமொழிகளும் கருத்துக்களும்

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - **ஒற்றுமையே பலம்**
2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் - **உத்தம நட்பு**
3. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு - **எதையும் அளவோடு செய்ய வேண்டும்.**
4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - **விடாமுயற்சி பலன் தரும்**
5. அழுத பிள்ளை பால் குடிக்கும் - **முயற்சி செய்தவர் பயன் பெறுவர்**
6. அகத்தின் அழகு முகத்திற் தெரியும் - **உள்ளத்தில் உள்ளதை முகத்தில் அறியலாம்.**
7. அடாது செய்பவன் படாது படுவான் - **கேடு செய்தவர் துன்பம் அனுபவிப்பர்.**
8. ஆனைக்கும் அடி சறுக்கும் - **பெரியோரும் தவறலாம்**
9. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு - **எதையும் அளவோடு செய்ய வேண்டும்**
10. ஆழம் அறியாது காலை விடாதே - **எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.**
11. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் - **கோபம் சிந்தனைக்குஇடையூறு**
12. ஆறின கஞ்சி பழங்கஞ்சி - **காலத்தின் மகிமை**
13. இளங்கன்று பயமறியாது - **இளமையிற் துணிச்சல்**
14. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - **திருப்திப்படாத மனம்**
15. இரக்கப் போனாலும் சிறக்கப் போ - **வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்**
16. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து- **இளவயதுக் கல்வி நிலைத்திருக்கும்**
17. இட்டுக் கெட்டார் எங்குமில்லை - **தருமஞ்செய்**
18. உப்பிட்டவரை உள்ளவும் நினை - **நன்றி மறவேல்**
19. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே - **சுவையில்லாத உணவினால் பயன் கிடையாது**
20. உண்ணாய்ச் சொத்து மண்ணாய்ப் போகும் - **பயன்படுத்தாத பொருள் பயனற்றுக் போகும்**
21. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் - **பகை அழிவைத் தரும்**
22. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - **வீண் பெருமை**

23. எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே - **கிடைக்காத ஒன்றிற்காக ஏங்குதல்**

24. எலி வளையானாலும் தனி வளை வேண்டும் - **சிறிய பொருளானாலும் சொந்தமாக இருக்க வேண்டும்**

25. எறும்பூரக் கற்குழியும் - **தொடர் முயற்சியின் பயன்**

*சு. பவிசானினி*

*3A*



## எனது பாடசாலை

1. எனது பாடசாலை யா/ ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை.
2. இது எழில்மிகு கந்தரோடைக் கிராமத்தில் அமைந்துள்ளது.
3. இப்பாடசாலை உடுவில் கோட்டத்தில் தனித்துவமிக்க பாடசாலையாகத் திகழ்கின்றது.
4. எமது பாடசாலை அழகிய தோற்றத்துடன் காட்சி அளிக்கின்றது.
5. எமது பாடசாலையை அதிபர் திரு.வ.நந்தீஸ்வரன் மிகவும் சிறப்பான முறையில் வழிப்படுத்தி வருகின்றார்.
6. எமது பாடசாலையில் 13 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.
7. இங்கு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை வகுப்புக்கள் உள்ளன.
8. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளிலும்இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக பங்கு பற்றி வருகின்றனர்.
9. எமது பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, நவராத்திரி விழா, ஒளி விழா என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.
10. இது சுன்னாகம் குடும்பத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உள்ளது.

*ஸ்ரீ. பாவினி ,*

*2A*

# Festivals

Festivals make us happy and enjoyable. Festival can be celebrated by Hindus, Buddhists, Muslims and Christians. Festivals are very colourful and attactive. During the festival time we can spend our greetings and food which we prepared. Vesak festival is celebrated by Buddhists. Deepavali and Thaipongal festivals are celebrated by all christians. In World wide. Muslims celebrate Ramazan festival. Like wise all people around the world celebrate different types of festivals to be happy. Specially small children can play celebrating cultural festivals and religious festivals. There are also peraheras for Buddhists and special pooja for hindus. Good Friday for Christians and Muslims fast without any foods for several days. So we must celebrate festivals without fight and quarrel. For example Sinhala and Tamils. Like wise all of us have to celebrate festivals peacefully. Finally I like to say festivals are celebrated only for the happiness and enjoyment.

**M. Rammiya (Old girl)**
*J/ Veambadi girl's high school.*

**JOKES :**

1) How can a man go eight days without sleep ? **He sleeps at night.**
2) If you throw a red stone into the blue sea what will become ? **It becomes wet.**
3) What often falls but never gets hurt ? **Rain**
4) What looks like a half apple? **The other half**
5) What gets wet with drying ? **A towel**
6) What 3 letters change a girl into a women ? **AGE**
7) Why is it easy to weigh a fish ? **Because it has own scales.**
8) Why does a bike rest on its leg ? **Because it is too tyred.**
9) Bay of Bengal is which state? **Liquid**
10) If it took eight men ten hours to build a wall, how long would it take four men to build it ? **No time at all it is already built.**



# பன்னாட்டுப் பழமொழிகள் அறிவோம்.

1. நேற்றுச் செய்த தவறை ஒப்புக் கொண்டால் இன்று நீ அறிவாளி என்பதை உணர்த்தும். **ஒல்லாந்து**
2. கொடுப்பதற்கும் சேமிப்பதற்கும் அறிவு வேண்டும். **ஸ்பெயின்**
3. பணமில்லாத வியாபாரி நிலமில்லாத விவசாயியைப் போன்றவன். **சுவிற்சர்லாந்து**
4. அறிவின் தந்தை ஞாபகசக்தி எனில் அதன் தாய் சிந்தனை என்பது. **ஸ்கொட்லாந்து**
5. இதயமும் நாவும் சிறியவை தான் ஆனால் அவை ஒரு மனிதனின் உயர்வைக் காட்டுகின்றன. **ஜேர்மன்**
6. அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள் மாதிரி. **ஜப்பான்**
7. உடம்பின் அழுக்கு கழுவினால் போகும் மனதின் அழகு மரித்தால்த்தான் போகும். **வங்காளம்**
8. சமயம் இல்லாத மனிதன் கடிவாளம் இல்லாத குதிரையைப் போன்றவன். **லத்தீன் அமெரிக்கா**
9. சுயநலம் என்ற நெருப்பானது முதலில் மற்றவர்களைப் புசிக்கிறது. பின்னர் தன்னைப் புசிக்கிறது. **ரஷ்யா**
10. காதை நம்புவதைக் காட்டிலும் கண்களை நம்புவது மேலானது. **போலந்து**

*சு. தனுறா,*
*4A*



# அன்பான பெற்றோர்

கருவுற்ற நாள் முதலாய் கருணை முகம் கொண்டு கண்ணை இமை காப்பது போலக் காப்பவள் எம் தாய். கடமையே மேலானது என எண்ணி வளர்ப்பதனைக் கொண்டவர் எம் தந்தை. எமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கல்வி கற்பிக்க அரும்பாடு படுபவர்கள் எம் பெற்றோர். "தாயில் சிறந்த கோயிலும் இல்லை"; "தந்தை சொல் மிக்க மந்திரமுமில்லை" என்பதற்கிணங்க எம் கண்கண்ட தெய்வங்கள் பெற்றோர். "தினமும் அவர்களது பாதங்களை வணங்கி அவர்களது சொற்படி நடப்பது கடமை. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்" என்பது பழமொழி. நித்தம் எமக்குச் செய்யும் சேவையில் சலிக்காதவர்கள் பெற்றோர். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த எமக்காய் உழைக்கும் அப்பா. தந்தையின் உழைப்பைச் செய்காரியத்தால் மிச்சப்படுத்தும் அம்மா எம்மை ஓர் முள்ளும் குற்றாமல் காப்பவர்கள். தாய் தந்தை அவர்களது சொற்படி நடந்து நல்ல பிள்ளைகளாக வாழ்வோம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

கண்ணை இமை காப்பது போல்
காத்து எமை வளர்த்திடும்
அன்னை உன்னைப் போல் இவ்வுலகில்
யாரும் இல்லை இல்லையே

அப்பா மிகவும் நல்லவராம்
அன்பு காட்டி அணைப்பவராம்
சீரும் சிறப்பும் தந்தென்னை
சிறக்க வைத்தார் உலகத்தில்

*ம. டிலக்சிகா*
*1B*



# ஒழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது திருவள்ளுவருடைய வாக்கு ஆகும். ஒருவனது உயிரை விட மேலானது ஒழுக்கம் ஒருவனுக்கு உயர்வை ஏற்படுத்தக் கூடியது ஒழுக்கம் ஆகும். ஒருவனது சிறப்பான வாழ்வுக்கு சிகரமாக அமைவது ஒழுக்கம் ஆகும். சிறுவர்களாகிய நாம் நல்ல ஒழுக்கம் உடையவர்களாக வாழ வேண்டும்.

நாம் நல்ல பழக்கங்களை பழகிக் கொள்ள வேண்டும் பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும். அவர்களைப் பேணிப் பாதுகாகக் வேண்டும். ஏனையோருடன் அன்பாகப் பழக வேண்டும். நன்றாக கல்வி கற்க வேண்டும். பெரியோரை மதிக்க வேண்டும். நாம் நல்ல ஒழுக்கமே சிறந்தது என்பதை மனதில் நிறுத்தி வாழப் பழக வேண்டும்.

நமக்குப் பொருள், புகழ் சேர வேண்டுமாயின் ஒழுக்கம் அவசியம் நாம் ஒழுக்கத்தை உயிர் போல கருதிக் காப்பாற்ற வேண்டும். ஒழுக்கத்தின் மூலமாக எமக்கு மேன்மை கிடைக்கும். ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் பலர். புத்தர், யேசு, காந்தி போன்றோர் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள்.

நாம் பாடசாலையில் கல்வி, ஒழுக்கம் ஆகிய இரண்டையுமே பயில வேண்டும். எமக்குப் பெரிய பட்டம், பதவி வந்தாலும் ஒழுக்கம் இல்லாவிடின் எம்மை யாருமே விரும்ப மாட்டார்கள். காந்தித் தாத்தாவும் மாணவர்கள் ஒழுக்கம் பயில வேண்டும் என உபதேசித்தார்கள். ஒருவனிடம் எத்தனை செல்வம் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லை. ஒழுக்கம் உடையவர்களையே சமுகம் மதிக்கும்.

ஒழுக்கம் பேணுவோம்!
வாழ்வியல் உயர்வோம்!
நற் பிரஜையாக நாட்டிற்கு உழைப்போம்!
ஒழுக்கம் சிறந்தது பாப்பா
நல்லொழுக்கம் பேண் பாப்பா
தாய் தந்தை பேண் பாப்பா
உலகத்தோடு ஒத்திரு பாப்பா
நன்றி மறவேல் பாப்பா

***சி. வர்ணிஷா***
*2B*



# கணனி

கணனி ஒரு மின்னியல் கருவி ஆகும். தற்கால உலகின் ஒரு இணையற்ற கண்டுபிடிப்பு இதுவாகும். மனிதனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள கணனி உருவாக்கப்பட்டது. கணனி எமது கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படும். கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் சாள்ஸ் பபேஸ் வோர். இவர் கேம்பிரிஸ் பல்கலைக்கழக கணிதத்துறை பேராசிரியர் ஆவார்.

எமக்கு கணனி பெரும் துணை புரிகிறது. எமக்கு பாடம் சொல்லித் தருகிறது. நமக்கு ஏற்ற மாதிரி மெதுவாகவும், துரிதமாகவும் கற்க உதவுகிறது. பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவர கணனி துணை புரிகின்றது. கணனி மூலமாக உலகத் தொடர்புகள் நமக்குக் கிடைக்கின்றது. இணையத் தொடர்புகள் மூலம் பல தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றோம்.

இன்று கணனி பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுகிறது. மருத்துவம், நூலகம், தகவல் தொடர்பு, வானியல் ஆய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பயன்படுகிறது. கணனிக்கு இணையத் தொடர்பை ஏற்படுத்தும் போது கூடுதலான பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முதன் முதலில் கணனி கணிப்புத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. பின்பு பல தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. உலகின் முதலாவது தானியங்கிக் கணனி "மார்க் - I" ஆகும். உலகின் முதலாவது இலத்திரணியல் கணனி "எனியாக்" ஆகும். முதலில் விலைக்கு விற்க்கப்பட்ட கணனி "யுனிவோக்" ஆகும். தற்போது கணனியில் பல்வேறு மாற்றங்கள் வந்து விட்டன. இடத்துக்கு இடம் கொண்டு செல்லக் கூடிய முறையில் மிகச் சிறிய கணனிகளும் வந்துள்ளன.

இன்றைய உலகில் மனித வாழ்க்கையில் கணனி முக்கிய பங்கு வகிக்கின்றது. வரும் காலங்களில் கணனியின் துணை இல்லாமல் நாம் வாழ முடியாத நிலை ஏற்படலாம். கணனி பற்றிய விடயங்களை அறியாதவர்கள் ஒதுங்கி வாழ வேண்டிய நிலை எற்படலாம். எனவே கணனியும் கணனி பற்றிய அறிவும் நமக்கு அவசியமான ஒன்றாகும்.

*ப. அட்சரா*
*2B*



# இறைவணக்கம்

இனிய வாழ்வைப் பெறுவதற்கு இறைவணக்கம் இன்றியமையாதது காலையும் மாலையும் கடவுளை வணங்குதல் நல்லதொரு பழக்கம் ஆகும். இறை வணக்கத்திற்கு மிக உகந்த இடம் கோயில் ஆகும். இறைவனைத் துதி செய்யும் தோத்திரங்களை மனனம் செய்தலும் நன்று. இவ்வழக்கம் எம் இதயங்களில் அன்பையும் செழிக்கச் செய்கிறது. இறைவனைப் பக்தியுடன் தொழுவதால் மனம் தூயதாகும். தீய எண்ணங்கள் விலகி வாழ்வு சிறக்கும். கோயிலில் நிறைந்த அமைதியும் தூய்மையும் மனிதனை அமைதிப் படுத்திதுகின்றது. எக்கருமத்தைச் செய்யும் போதும் இறை சிந்தனை எம் மனதில் இருக்க வேண்டும். அகிலமெல்லாம் ஆளுகின்ற ஆண்டவனைச் சிந்தனை செய்வோம். அனுதினமும் அவர் பாதங்களை வந்தனை செய்வோம்.

*சி. தஷாந்தன்*
*1A*

**தீமைகள் உங்களை அணுகாமல் இருக்க**
**உங்கள் எண்ணங்களில் தீமைகள் இல்லாமல்**
**பார்த்துக்கொள்ளுங்கள்.**

**-சோக்கிரட்டீஸ்.**

**சிந்தனைத்துளி :**
**ஒரு மனிதன் சிந்திப்பது சிறந்தது,**
**ஒரு மனிதனைச் சிந்திக்க வைப்பது அதனிலும் சிறந்தது.**

**குறிக்கோள், விடாமுயற்சி, கடவுள் அனுக்கிரகம் ஆகிய மூன்றும் வெற்றிப்பாதைக்கான அம்சங்கள்.**



# பொது அறிவுத் தகவல்கள்

1. உலகில் அதிக மழை பெறும் இடம் எது?
   **சீராப்புஞ்சி**
2. உலகிலேயே அதிக அளவு எரிமலைகள் உள்ள நாடு?
   **இந்தோனேசியா**
3. உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு எது? **இந்தோனேசியா**
4. உலகில் கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நாடு எது? **நெதர்லாந்து**
5. உலகின் 2ம் உலக யுத்தப் போரில் அழிந்த இரண்டு நகரங்கள் எவை?
   **குரோஷீமா, நாகசாகி**
6. உலகிலே மிக உயரமான அணை எது? **போல்டர் அணை**
7. உலகின் மிக உயரமான மலைச் சிகரம் எது? **எவரஸ்ட் மலைச் சிகரம்**
8. உலகில் மிக நீளமான ஆறு எது? **நைல்நதி**
9. உலகை முதலில் சுற்றி வந்த மனிதன் யார்? **மகலன்**
10. விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற உயிரினம்? **லைக்கா என்ற நாய்**
11. விலை உயர்ந்த உலோகம் எது? **பிளாட்டினம்**
12. பிசா நகர சாய்வு கோபுரம் எங்கே உள்ளது? **இத்தாலி**
13. நயாகரா நீர் வீழ்ச்சி எங்குள்ளது? **அமெரிக்கா – கனடா எல்லையில்**
14. உணவை இலைகளிலேயே வைத்துள்ள செடி? **முட்டைக்கோஸ்**
15. நட்சத்திரம் எந்த மதத்தின் சின்னம்? **யூதமதம்**
16. இலத்தீன் மொழியில் உள்ள எழுத்துக்கள்? **21**
17. குர் - ஆன் முதன் முதல் எந்த மொழியில் எழுதப்பட்டது? **அராபிக்**
18. 101 அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல் உள்ள நாடு எது? **அமெரிக்கா**
19. ஜப்பானின் மற்றொரு பெயர் ? **நிப்போன்**
20. தூங்காத பறவை? **புறா**
21. நினைவாற்றல் கூடிய மிருகம் எது? **யானை**
22. தமிழில் உள்ள வருடங்கள் எத்தனை ? **60 வருடங்கள்**
22. வாயில் சுவை நரம்புகள் இல்லாத பிராணி எது ? **திமிங்கிலம்**
23. நிலத்தில் வாழும் மிகப் பெரிய முலையூட்டி எது? **ஆபிரிக்கா யானை**
24. குழி தோண்டி முட்டையிடும் பூச்சி எது? **வெட்டுக்கிளி**
25. குட்டித் தூக்கம் போடும் பிராணி எது? **முயல்**
26. மிகப்பெரிய வாயுள்ள விலங்கு எது? **நீர்யானை**
27. சாகும் வரை வளரும் ஊர்வன எது? **முதலை**
28. பறக்கும் போதே தூங்கும் பறவை எது ? **ஆல்பட்ராஸ்**
29. உலகில் புகழ் பெற்ற நீர் வீழ்ச்சி எது ? **நயகரா**

30. உடல் வியக்காத பிராணி எது? **ஒட்டகம்**
31. ஆரவல்லி மலைகள் கொண்ட நாடு எது ? **ராஜஸ்தான்**
32. மகிழ்ச்சித் தோட்டம் எங்குள்ளது? பிள்ஜோர் - **அரியானை**
33. இன்கொத் விகாரையின் வடிவம் யாது? **நீர்க்குமிழி**
34. தேனீக்கு மொத்தம் எத்தனை கண்கள் உள்ளன? **5 கண்கள்**
35. மிகவும் குறைந்த நேரம் மலரும் பூ எது ? **பார்லிப்பூ**
36. மலேசியாவின் தேசியப் பறவை எது ? **மைனா**
37. பூமியின் தற்போது வயது எத்தனை?
    **கிட்டத்தட்ட 4600 மில்லியன் வருடங்கள்**
38. நிறங்களைக் கொண்ட பறவை எது? **பித்தா**
38. நிமோனியோ உடலில் எந்தப் பகுதியைத் தாக்குகிறது? **நுரையீரலை**
39. மண்ணினுள் பூக்கும் செடி எது? **ரிசன்டேலியா, கார்டன்**
40. ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வழக்கம் எப்போது ஆரம்பமாகியது?
    **1961 ஆம் ஆண்டு**
41. மிருதங்கம், வீணை செய்யப் பயன்படும் மரம் எது? **பலாமரம்**
42. உலகில் குளிர்ச்சியான பகுதி எது? **அண்டார்டிக்கா**
43. முதல் உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
    **1966ல் மலேசியா கோலாலம்பூரில்**
44. மிக வேகமாக வளரும் தாவரம் எது? **மூங்கில்**
45. பறவைகள் கூடு கட்டாத மரம்? **இலந்தை மரம்**
46. உலகிலேயே மிக அதிகமான நாடுகள் எல்லையைக் கொண்ட நாடு எது?
    **சீனா 13 நாடுகள்**
47. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர்? **ராகேஸ் சர்மா**
48. விண்வெளியில் அதிக நாட்கள் மிதந்தவர்? **பஜ் ஆஸ்பிரில்**
49. அமெரிக்கா வெள்ளை மாளிகையில் வசித்த முதல் ஜனாதிபதி?
    **ஜோன் ஆடம்ஸ்**
50. ஆங்கில அகராதியைத் தொகுத்தவர்? **சாமுவேல் ஜோன்சன்**
51. இலங்கையில் இறப்பர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
    **1877 ஆண்டு**
52. சர்வதேச அணுசக்தி நிலையம் எங்கே உள்ளது? **வியன்னா**
53. 1 மைல் என்பது எத்தனை மீற்றர்? **1667 மீற்றர்**
54. 1000 கோயில் தீவு எனப்படும் தீவு எது? **இந்தோனேசியாவின் பாலித்தீவு**

*ம. கஜன்*
*5B*



# சிறுவர்களுக்கான போசாக்கு உணவின் அவசியம்

சிறுவர்கள் உட்கொள்ளும் உணவுகள் பல வகையிலும் உதவி புரிகின்றன. எல்லா உயிரினங்களுக்கும் உடலில் உள்ள கலங்கள் புனரமைக்கப்பட உணவு அவசியம். சிறு குழந்தைகள், வளரும் பிள்ளைகளில் கலங்கள் பெரும் எண்ணிக்கையில் உருவாக வேண்டியுள்ளது. இச் செயற்பாடானது அன்றாடம் நம் வாழ்வில் இடம் பெறுகின்றது. இதற்குப் போசாக்கான உணவு அவசியமாகின்றது. அதிகளவான வளர்ச்சியினையும், விருத்தியினையும் பெற ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள் அவசியமாகின்றன. இந்த ஆரோக்கிய நிலையானது வயது வந்த காலங்களில் நீரிழிவு, இருதய அடைப்பு, பாரிசவாதம் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்படாது தடுக்க உதவும்.

போசாக்கான உணவுகள் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்குத் தேவையான சக்தியையும் போசாக்கையும் வழங்குகின்றன. ஒவ்வொரு வகையான உணவுகளும் உடலுக்குத் தேவையான வெவ்வேறு போசாக்குகளை வழங்குகின்றன. போசாக்கான உணவைப் பெற்றுக் கொள்வதற்குத் தினமும் பல வகையான உணவுகளைச் சாப்பிட வேண்டும். அவையாவன தானியங்கள், கிழங்குகள் நாளாந்தச் செயற்பாட்டுக்குரிய சக்தியை வழங்கும். பழங்கள், காய்கறிகள் நோய்களிலிருந்து பாதுகாக்கும். மீன், பருப்புக்கள், இறைச்சி, முட்டை உடல் வளர்ச்சிக்கும் உடலைப் பேணிப்பாதுகாப்பதற்கும் உதவும். பால் மற்றும் பால்பொருட்கள் எலும்பு மற்றும் பல் போன்றவற்றைப் பேணிப்பாதுகாப்பதற்கும் உதவும். எண்ணெய் விதைகள் உடல் தொழிற்ப்பாட்டிற்குச் சக்தியை வழங்க உதவும்.

பாடசாலை செல்லும் சிறுவர்களின் வளர்ச்சி படிப்படியாகத் தொடர்ந்து அதிகரிக்கின்றது. அவர்களின் செயற்படுகளின் மட்டத்திற்கு அதிக சக்தி தேவைப்படுகின்றது. பாடசாலைக்குச் செல்ல முன் போசாக்கான

காலை உணவை எடுக்க வேண்டும். இடைவேளை நேரத்தில் போசாக்கான சிற்றுண்டி உணவுகள் எடுக்கப்பட வேண்டும். சீனி, உப்பு, கொழுப்புகள் அடங்கிய உணவுகள் உட்கொள்வது வரையறை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு உணவு வேளைக்கும் பல்வேறுபட்ட உணவுகள் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். வளர்ச்சியானது வயதுக்கு ஏற்ற உயரத்தையும் உயரத்துக்கு ஏற்ற நிறையையும் மதிப்பிட்டு மீளாய்வு செய்யப்படுகின்றது. பாடசாலைகளில் வைத்தியப் பரிசோதனை மூலமாக இது அறியப்படுகின்றது. நொறுக்குத் தீனிகள் எண்ணெய்த் தன்மையான உணவுகள், மென்பானங்கள் போன்றவற்றை உள்ளெடுப்பதால் போசாக்கு தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட ஏதுவாகின்றன.

சிறுவர்கள் பல நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குடும்பங்களில் பொருளாதாரப் பிரச்சனைகள் மனத்தாக்கங்கள் ஏற்படுகின்றன. எனவே இவற்றை விடுத்து போசாக்கான உணவுகளை உட்கொண்டு நல்ல ஆரோக்கியத்தைப் பேண வேண்டும்.

சத்துமிக்க காய்கறிகள், பழங்கள், உண்போம் பாற்பொருட்களைத் தினமும் எடுப்போம். இயற்கை உணவுகளை எடுப்போம் பதப்படுத்திய உணவின் பயன்பாட்டைக் குறைப்போம். போசாக்கான உணவை உண்போம் நோய்களைத் தவிர்ப்போம் கல்வியில் உயர்வோம். நல்லதொரு சமூகத்தைப் படைப்போம்.

***செல்வி சு. யுஸ்திகா (பழைய மாணவி)***
***தரம் 06***
***ஸ்கந்தவரோதயக் கல்லூரி***

**வளர்த்துக்கொள் வேண்டியவை:**
தொழிநுட்ப அக்களை, ஏனைய மொழிகளைக் கற்றல், சுயமாகத் தீர்மானம் எடுத்தல், ஆத்மீகத் தொடர்புகள், முகாமைத்திறன்கள், சமூக செயற்பாட்டில் அக்கறை, அழகியல் நாட்டம்.



# மகாத்மா காந்தி

காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் எனும் கிராமத்தில் 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாந்திகதி பிறந்தார். மோகனதாஸ் காந்தி என்பது இவரது இயற் பெயர். காந்தி என்பது அவரது குடும்பப் பெயராகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே பெற்றுக் கொண்டார். இவர் தனது இளம் பராயத்தில் அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் நாடகம் போன்றவற்றைப் பார்த்து நல்லொழுக்கங்களைப் பேசுபவராகவும் கடைப்பிடிப்பவராகவும் விளங்கினார். இப்பராயத்திலே இவருக்கு அக்கால வழக்கப்படி பெற்றோர் கஸ்தூரிபாயைத் திருமணம் செய்து வைத்தனர்.

மோகனதாஸ் காந்தி சட்டக்கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்ற பொழுது இவரது தாயார் இவருக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். அவற்றுள் "மது அருந்தாதே", "பொய் சொல்லாதே" என்பன முக்கியமானவையாகும். இவ் அறிவுரைகளை மனதிற் கொண்டு வாழ்ந்தார். மூன்றாண்டுகள் முயன்று கற்று "பாரிஸ்டர்" பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.

சிறிது காலம் இந்தியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். அப்பொழுது ஒரு வழக்குத் தொடர்பாக தென்னாபிரிக்காவிற்குச் சென்றார். தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வந்த இந்தியர்களை வெள்ளையர்களும் வெள்ளையர் அரசாங்கமும் தாழ்வாக நடத்தியதைக் கண்டு வேதனைப்பட்டார். அவரது துன்பங்களைப் போக்க விளைந்தார். சத்தியாக் கிரக வழியில் நின்று துயர் துடைக்க முனைந்தார். அதில் வெற்றியும் கண்டார்.

அதன் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது இந்தியா அந்நியருக்கு அடிமைப்பட்டுத் தாழ்வுற்று இருந்தது. இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் பலர் உழைத்தனர். காந்தியடிகளும் தம்மை அவருடன்

இணைத்துக் கொண்டார். பல முறை சிறை சென்றார். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தத் திடசங்கற்பம் கொண்டார். இவரது பெற்றோர் பெருஞ்செல்வந்தர்களாக இருந்த போதும் இவர் கைராட்டினம் கொண்டு நெய்யப்பட்ட கதர் உடைகளை அணிந்து எளிமையான வாழ்க்கை நடாத்தி வந்தார். அஹிம்சை ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை உணர்ந்து அன்பு வழியில் நின்று நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி இந்திய சுதந்திரக் கொடி ஏற்றப்பட்டது. காந்தியடிகள் எழுதிய "சத்திய சோதனை" அவரது சுயசரிதை ஆகும். இந்நூல் மூலமாக இவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளலாம். இவர் கடைப்பிடித்த கொள்கைகளையும் அறியலாம். சத்தியத்தில் இவருக்குக் கூடிய ஈடுபாடு உள்ளது.

இவர் சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து காட்டியவர். சமூகத்தில் இருந்து கொண்டு சமூக சேவை செய்தலை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டு இருந்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள் ஆவார். அநீதி குற்றம் இழைத்தவர்களுக்குங் கூடத் தீங்கு செய்யக் கூடாது பாவத்தை வெறுக்கலாம். ஆனால் பாவம் செய்தவனை ஒரு போதும் வெறுக்கக் கூடாது என்பது இவர் சோதனையாக இருந்தது.

இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் மகான் ஆவார். இவரைப் பாரத நாடு மட்டுமன்றி முழு உலகமுமே போற்றுகின்றது. இவர் வாழ்ந்து காட்டிய பாதையில் பலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவரின் பெயரால் பாரதத்திலும் இலங்கையிலும் இயங்கி வரும் சேவை நிலையங்கள் இன்றும் இவருடைய பணிகளை நினைவுறுத்துகின்றன.

***சு. ஷாருமதி பழைய மாணவி***
***யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி***
***தரம் : 7A***



# அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே அடிப்படை

அன்னை மடியில் குழந்தையாய் அறிந்து கற்ற முதல் மொழி தாய் மொழி. பிறந்தது முதல் அறிந்து பேசி வரும் மொழியே தாய் மொழி. தாயானவள் குழந்தைக்கு உணவு ஊட்டுவதோடு உணர்வையும் சேர்த்து ஊட்டுகிறாள். அதற்குப் பயன்படுவது. தாய்மொழியே. "தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை" என்பது போல தாய் மொழியில் சிறந்த வேறு மொழி இல்லை என்பது அறிஞர் தம் கருத்தாகும். ஒருவன் எத்தனை மொழிகளையும் கற்றுக் கொள்ளலாம் எனினும் அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே அடிப்படையானது.

தாய் மொழி மூலம் கல்வி பயிலும் குழந்தையே தனது இயல்பூக்கங்களுக்கு ஏற்ப பூரண திறன்களை வெளிக்காட்ட முடியும் என்பது கல்வி உளவியலாளர்களது கருத்தாகும். இதனால் தான் தாய் மொழி மூலம் கல்வி புகட்டப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிள்றனர். இன்று உலக அரங்கில் வளர்ச்சி பெற்ற நாடுகளாக மிளிரும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், ரஷ்யா, கனடா போன்ற நாடுகள் தத்தம் மொழி மூலமே கல்வி பயின்ற நிபுணர்களையுளும் விஞ்ஞானிகளையும் பெருமளவில் கொண்டுள்ளன.

ஆங்கில மொழியே உயர் கல்விக்கு ஏற்ற மொழி. தாய் மொழி மூலம் எதுவும் சாதித்து விட முடியாது எனச் சிலர் கூறுகின்றனர். எனினும் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்றோரிலும் பார்க்கத் தாய்மொழி மூலம் கல்வி பயின்றோரே இன்று உலகில் சிறந்தவிஞ்ஞானிகளாகவும், பொறியியலாளர் களாகவும், மருத்துவத்துறை நிபுணர்களாகவும் விளங்குகின்றனர்.

1917ஆம் ஆண்டு பொது உடமைப் புரட்சி மூலம் ஆட்சி அடைந்த சோவியத் யூனியனும் 1950ல் பொது உடமைப் புரட்சி மூலம் ஆட்சி அமைத்த மக்கள் சீனாவும் இரண்டாம் உலகப் போரின் அழிவின் பின் புதிய உருப்பெற்ற ஜப்பானும் பொருளாதாரத் துறையில் வளர்ந்த நாடுகளுக்கு ஈடாக இன்று முன்ணியில் திகழ்கின்றன. இதற்கு முக்கிய காரணம் அந் நாடுகள் எல்லாம் தத்தம் தாய் மொழி மூலம் கல்வி புகட்டியமையே ஆகும். அந்நாடுகளில் தாய் மொழி மூலம் கல்வி பயின்றோரே சிறந்த நிலையில் உள்ளனர். எனவே எமது தாய் நாட்டின் தாய் மொழியே எமது அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

*ஆ. ராகுலன் பழைய மாணவன்*

*தரம் : 08, யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி*



# நொடியும் விடையும்

1) பந்து நிறையப் பவள ராணிகள்?
2) நன்னுவார் தின்னமாட்டார்?
3) ஊதினால் சிவப்பாள் நீருற்றினால் கறுப்பாள்?
4) நீரிலே பிறந்தவன் நீரிலே அழிகிறான்?
5) வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை?
6) தட்டு வீட்டுக்குள் முட்டுப்பலகை?
7) ஒற்றைக் கால் குள்ளனுக்கு எட்டுக்கை?
8) இரண்டு வீட்டுக்கு ஒரு சுவர்?
9) பாம்பு ஓடுவது ஏன் பாழ்ங் கிணறு இடிவது ஏன்?
10) தாய் குப்பையிலே மகள் சந்தையிலே?
11) உயரக் கிளையில் உரல் கட்டித் தொங்குது?
12) ஊசி முனையில் ஒய்யாரச் சங்கீதம்?
13) வெளிச்சத்திலே பிறந்ததை இருட்டிலே பார்க்கிறோம்?
14) ஒரு குப்பிக்குள் இரண்டு எண்ணெய்?
15) நெல்லுக்கும் புல்லுக்கும் நின்றாடும் குருவி?
16) அம்மான் வளவில் மொட்டைப் பசு எட்டி எட்டிப் பார்க்குது?
17) அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற வற்றக் குடிக்குது?
18) வட்ட வட்ட செப்புக்குள்ளே இட்டதெல்லாம் பாம்புக் குட்டி?
19) மரமில்லாத காட்டுக்குள் எலும்பில்லாதவன் திரிகிறான்?
20) உடம்பெல்லாம் நீறு பூசி சும்மா இருப்பார் சாமியார்?
21) காட்டிலே பச்சை கடையிலே கறுப்பு வீட்டிலே சிவப்பு?
22) அட்டைக் கரிப்பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள்?
23) தரையிலே தவழமாட்டான் தண்ணீரில் மிரளமாட்டான்?
24) செலவில்லாமல் வீடு கட்டி நிலையில்லாமல் வாழ்பவன்?
25) வெட்டலாம் கட்டலாம் கொண்டுவர இயலாது?
26) கோடி கோடி வெள்ளிப் பணம் ஓடி விடுகுது காலைப் பயணம்?
27) இருந்த இடத்தை விட்டு நகராமல் தோட்டத்தைச் சுற்றி வருகிறது?
28) கூட்டினாலும் பெருக்கினாலும் ஒன்றே வரும்?

29) விடிய விடிய சோழன் பொரி விடிந்து பார்த்தால் ஒன்றும் இல்லை?

30) ஓடுவார் ஆடுவார் கந்தப்பர் ஒற்றைக்காலில் நிற்பார்?

31) அண்ணனும் தம்பியும் இரண்டு பேர் அவர்களைச் சுற்றி பன்னிரண்டு பேர்?

32) இணைபிரியமாட்டார்கள் நண்பர்கள் அல்ல ஒன்று சேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல?

33) இந்த ஊரில் அடிபட்டவன் அடுத் ஊரில் போய் சொல்கிறான்?

34) இரவில் சுமந்திடுவான் பகலில் சுருண்டிடுவான்?

35) காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்க கொப்பில்லை?

36) ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டே போகிறார்?

37) காளை கட்டியிருக்கின்றது கயிறு மேய்கின்றது?

38) தாய் தள்ளப்பட்டு தரையிலே கிடக்கிறாள் மகள் மகாராணி மகிமையாய் இருக்கிறாள்?

39) உச்சி சலசலக்கும் உடல் கறுத்து நீண்டிருக்கும் நிமிர்ந்து பார்த்தால் கழுத்து வலிக்கும்?

40) ஏறு ஏறு சங்கிலி இறங்கு இறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் எட்டிவா சங்கிலி?

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. மாதுளம்பழம் | 2. பாக்குவெட்டி | 3. நெருப்பு | 4. உப்பு |
| 5. முட்டை | 6. நாக்கு | 7. குடை | 8. மூக்கு |
| 9. அடிப்பாரற்று | 10. வாழைமரமும் குலையும் | | 11. பலாப்பழம் |
| 12. இசைத்தட்டு | 13. சினிமாப்படம் | 14. முட்டை | 15. பணம் |
| 16. துலா | 17.விளக்குத்திரி | 18. இடியப்பம் | 19. பேன் |
| 20. நீத்துப்பூசணிக்காய் | | 21. விறகு | 22. பனம்பழம் |
| 23. மீன் | 24. சிலந்தி | 25. வரம்பு | 26. நட்சத்திரம் |
| 27. வேலி | 28. குப்பை | 29. நட்சத்திரம் | 30. கதவு |
| 31. மணிக்கூடு | 32. தண்டவாளம் | 33. தந்தி | 34. பாய் |
| 35. நெற்செடி | 36. நுளம்பு | 37. பூசணிக்காயும் கொடியும் | |
| 38. முத்துச் சிப்பியும் முத்தும் | | 39. பனைமரம் | 40. அணில் |

*சி. சஞ்சயன் பழைய மாணவன்*

*தரம் - 06, யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி*

## இல்லவிளையாட்டுப்போட்டி விருந்தினர்கள்

### 2011

**பிரதம விருந்தினர்** : திரு.S.யோகநாதன்

(தலைவர், தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய்.)

**சிறப்பு விருந்தினர்** : திரு.S.இராசநாயகம்

(முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்.)

**துறைசார் விருந்தினர்** : திரு.மு.நடராஜா

(உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம் )

### 2012

**பிரதம விருந்தினர்** : திரு.செ.குமரகுருபரன்

(முகாமையாளர், நீர்வளச் சபை, யாழ்ப்பாணம்.)

**சிறப்பு விருந்தினர்** : திரு.க.கருணைநாயகம்

(வலிதெற்குப் பிரதேச சபை உறுப்பினர்)

**துறைசார் விருந்தினர்** : திரு.S.துரைசிங்கம்

(மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் )

### 2013

**பிரதம விருந்தினர்** : திருமதி.R.உதயரட்ணம்

(உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி, வலிகாமம் கல்வி வலயம்)

**சிறப்பு விருந்தினர்** : திரு.கி.சுரேஸ்குமார் (ஸ்கந்தவரோதயன்)

(பிரதிப்பணிப்பாளர் நிதி, யாழ்போதனா வைத்தியசாலை)

**கௌரவ விருந்தினர்** : திரு.வ.தனநாயகம் (ஸ்கந்தவரோதயன்)

(முகாமையாளர் பசன் பார்க், சுன்னாகம்)

**துறைசார் விருந்தினர்** : திருமதி.கோ.குலபாலசிங்கம்

(உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்)

### 2014

**பிரதம விருந்தினர்** : திரு.சேது.விபுலானந்தா (ஸ்கந்தவரோதயன் )
(உபதலைவர், கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்)

**சிறப்பு விருந்தினர்** : திரு.ஜெ.மயில்வாகனம்
(ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், உடுவிற் கல்விக்கோட்டம் )

**துறைசார் விருந்தினர்** : திரு.ச.ஜசிதரன் (ஸ்கந்தவரோதயன்)
(விளையாட்டு உத்தியோகத்தர், வேலணை )

# Skandavarodaya Primary School
# Tutorial Staff - 2014

01. Mr.V.Nantheeswaran - B.B.A (Hons). Dip.in.Ed, M.Ed. (Principal)

02. Miss.V.Savithiry - Sp.Trd.(Primary), (Vice Principal)

03. Mrs.S.Pakeerathan - National Dip.in.Teaching.

04. Mrs.V.Sivakumar - B.Com, Dip.in.Edu,
Sp.Trd.(Primary)

05. Mrs.V.Ketheeswaran - Sp.Trd.(Primary)

06. Mr.T.Thevamohan - National Dip.in.Teaching
(Primary),B.Ed.

07. Mrs.L.Palakirushnan - Sp.Trd.(Primary)

08. Mrs.V.Prathapan - B.A. Dip.in.Ed.

09. Mrs.R.Sreeshkandaruban - B.A (Hons), Dip.in.Edu.

10. Mrs.C.T.Inparaj - Sp.Trd. (English)

11. Mrs.P.Rameshkumar - B.A, Dip.in.Edu.

12. Mrs.A.Uthayakumar - Special trained (English)

13. Mr.T.Sukumaran - Special trained (primary)

**Volunteers**

Mr.U.Rajeepan - G.C.E (A/L)

Miss.T.Sinthuja - G.C.E (A/L)

Miss.A.Anruja - G.C.E (A/L)

Miss.T.Subothini - G.C.E (A/L)

Mrs.K.Kunasingam - G.C.E (A/L)

Miss.M.Tharmini - G.C.E (A/L)

**Non Teaching staff**

Miss.Arunthathy Kaneshan (OES)

Mr.N.Thirunavukarasu ( Night Watcher)

## பரிசளிப்பு விழா விருந்தினர்கள்

### 2011

**பிரதம விருந்தினர்** : திரு.S.A.ஆறுமுகம் (ஸ்கந்தவரோதயன்)
[முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்]
**சிறப்பு விருந்தினர்** : திரு.S.குபேரநாதன்
[கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்]
**நினைவுப்பேருரை**: திரு.M.சதானந்தன் (ஸ்கந்தவரோதயன்)
[உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, லேக் கவுஸ் கிளை]

### 2012

**பிரதம விருந்தினர்** : திரு.S.பத்மநாதன் (ஸ்கந்தவரோதயன்)
[கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர்]
**சிறப்பு விருந்தினர்** : திரு.பொ.ரவிச்சந்திரன்
[பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாகம், வலிகாமம் கல்விவலயம்]
**நினைவுப்பேருரை:** திரு.A.திருவள்ளுவர் (ஸ்கந்தவரோதயன்)
[இயக்குநர், மாகா நிறுவனம்]
**கௌரவ விருந்தினர்** : திருமதி.J.மயில்வாகனம்
[ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், உடுவிற் கல்விக்கோட்டம்]

### 2013

**பிரதம விருந்தினர்** : திருமதி.செ.யோகராஜன் (ஸ்கந்தவரோதயன்)
[கொழும்பு பழைய மாணவர் சங்கம்]
**சிறப்பு விருந்தினர்** : திரு.S.கணேசலிங்கம்
[உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆங்கிலம், வலிகாமம் கல்வி வலயம்]
**கௌரவ விருந்தினர்** : திரு.B.சிவன்சேய்
[ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், உடுவில் கல்விக் கோட்டம் ]
**நினைவுப்பேருரை** : திரு.U.உதயபாலன் (ஸ்கந்தவரோதயன்)
[இளைப்பாறிய பிரதி அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி.]

### 2014

**பிரதம விருந்தினர்** : Dr.A.சக்திவேல்
[உப தலைவர், கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்]
**சிறப்பு விருந்தினர்** : திரு.T.தர்மலிங்கம்
[கோட்டக்கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்]
**சிறப்பு மலர் வெளியீட்டுரை** : திரு.சி.சிவஞானராஜா
[இளைப்பாறிய இசை ஆசிரியர்]
**நினைவுப்பேருரை:** திரு.கனக.புவனேந்திரநாதன் (ஸ்கந்தவரோதயன்)
[இளைப்பாறிய பிரதி அதிபர், யஃஸ்கந்தவரோதயா கல்லூரி]

# PEOPLE'S BANK

THE PULSE OF THE PEOPLE

## மக்கள் வங்கியின் RELAX சேமிப்புத் திட்டம்
## இன்றைய ஏற்பாடு - நாளைய நின்மதியான வாழ்வு

- ✻ ஓய்வுக் காலத்தில் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ மக்கள் வங்கியின் People's relax சேமிப்புக் கணக்கு
- ✻ 18-68 வரையிலான எல்லோருக்கும் பீப்பிள்ஸ் ரிலெக்கஸ் (People's relax) சேமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும்.
- ✻ 50, 55, 60 மற்றும் 65 ஆகிய எந்தவொரு வயதிலும் நீங்கள் விரும்பியவாறு ஓய்வூதியம் பெறலாம் அல்லது முதிர்வில் முழுத் தொகையையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய அரச வங்கிகளை விட அதிக சலுகைகள்.

வியாங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கியிடம் விரையுங்கள்.

பொன்னான எதிர்காலத்திற்கு இன்றே திட்டமிடுங்கள்.

-நிபந்தனைகளுக்கு உட்பட்டது-

**உங்களது ஓய்வூதிய நிதியம் வளர்ச்சியடையும் விதம்**

**5. உங்களது ஓய்வூதிய நிதியம் வளர்ச்சியடையும் விதம்:**

- நீங்கள் மாதாந்தம் வைப்புச் செய்யும் பணத்தின் அளவிற்கேற்ப
- உங்கள் வைப்பிற்கு மாதாந்தம் சேர்க்கப்படும் வட்டியினாலும்
- நீங்கள் வைப்பிலிடும் மேலதிக தொகைகள் (போனஸ் வருமானம், சம்பள உயர்வுகள்)

கீழே காண்பிக்கப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் ஓய்வூதிய நிதியம் வளர்ச்சியடையும் விதம் பற்றி மேலும் புரிந்துகொள்ளலாம்.

நீங்கள் ஓய்வூதிய அனுகூலத் தொகையைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்திருக்கும் வயது 55 எனின்,

| உங்கள் தற்போதைய வயது | [illegible] | ஓய்வூதிய வயதை (55 வயது) எட்டியதும் [illegible] | |
|---|---|---|---|
| | | மாதாந்தம் ரூ.1000/- வீதம் வைப்பிலிட்டால் | மாதாந்தம் ரூ.5000/- வீதம் வைப்பிலிட்டால் |
| 20 | 35 | 1,431,833.85 | 7,159,169.25 |
| 25 | 30 | 1,009,537.62 | 5,047,688.09 |
| 30 | 25 | 696,458.93 | 3,482,294.66 |
| 35 | 20 | 464,351.10 | 2,321,755.50 |
| 40 | 15 | 292,272.81 | 1,461,364.03 |

இல.ரூ.

*வருடாந்த வங்கி வட்டி வீதம் 6% எனும் அடிப்படையில் மேற்கூறிய தொகைகள் [illegible]

LG SMARTPHONES

அபான்ஸ் காட்சியறை

சுன்னாகம்

விழுந்தாலும்...
உடைந்தாலும்...
வெடித்தாலும்...
நனைந்தாலும்...

உத்தரவாதம் கிடைப்பது
எம்மிடம் இருந்து மட்டுமே...

இலவசம்




அனைத்து LG கையடக்கத் தொலைபேசிகளுக்கும்
செல்லுபடியாகும்.

021 2240440

Abans

ரஷ்மி புக்மாட்

பாடசாலை உபகரணங்களுக்கு
முன்னனி ஸ்தாபனம்



தட்டாதெரு சந்தி,
925/1 காங்கேசன் துறை வீதி ,
யாழ்ப்பாணம்
தொ. இல: 0212225151

# Sri karan

## Book Centre



பாடசாலை தரஉள்ளீட்டுப் பொருட்களைப் பெற
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

Jaffna deeler






No. 73. K.K.S. road
Chunnakam.

0777253037, 0770781660

# JEYA KRISHNA

## HARDWARE



No. 20. K.K.S. road
Chunnakam.

021 2240221

Retire with a smile on your face
and peace in your mind



BOC
ABHIMANA
For a dignified retirement...

BANK OF CEYLON
BOC

ஏன் எனக்கு ஒரு ஓய்வூதியத்திட்டம் தேவை?

* ஓய்வுகாலத்தை எவ்வித நிதி நெருக்கடியின்றி சுதந்திரமாகக் கழிக்க.
* மாதாந்த செலவுகளுக்காக உத்தரவாதத்துடன் கூடிய மாதாந்த நன்மைகளை அனுபவிக்க

ஏன் BOC அபிமானவுடன் இணைய வேண்டும்?

* உயர் நன்மைகள்
* சந்தையில் அதிகபடியான நன்மைகளைக் கொண்ட ஓய்வூதியத் திட்டம்
* பாதுகாப்பான நீண்டகால முதலீடு.

பங்களிப்பு செய்யும் தொகை, மற்றும் காலம் எவ்வளவு?

* தவணைக் கட்டணங்களுக்கு அமைய வயது,
* தெரிவு செய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டவகை மற்றும் ஓய்வூதிய நன்மைத் தொகை என்பவற்றுக்கு அமைய பங்களிப்புத் தொகையை நிச்சயிக்க முடியும்.

# SINGER Plus

KKS Road,
Chunnakam.


*பரிசளிப்பு விழாவும் , சிறப்பு மலர் வெளியீடும்*
*சிறப்புற வாழ்த்துகின்றோம்.*

# Mathu Cream House
# &
# multi spot



**sanguvely north, Manipay.**
**T.P. 0774206465**

director
*S.K. Dinesh*

**e.mail- mathuice2hotmail.com**
**Reg.no:vs/br/320**

# Arunalu

## Children's savings Account

Scholarship cash prizes to the students ranked 1st, 2nd 3rd in the Island at the year 5 scolarship Examination, until they reach 18 years.

**1st in the Island**

Rs. 2,000/- per month, up to a maximum of Rs. 170,000/-

**2nd in the Island**

Rs. 1500/- per month, up to a maximum of Rs. 127,500/-

**3rd in the Island**

Rs. 1,000/- per month, up to a maximum of Rs. 85,000/-

* A special cash prize of Rs.50,000/-for students ranked 1st in the district
* Cash prizes of. Rs. 10,000/--Rs.7,500/-and Rs. 5,000/- for students ranked 1st,2nd and 3rd in their schools

**A minium balance of Rs. 5,000/-
should be maintained in the Arunalu Account
by the date of the scholarship Examination
in order to receive the above rewards**

COMMERCIAL BANK



























New Barathy Printers,
Alaveddy